271

# ஜகன் மோகினி

டிசம்பர் 1955


JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு

271
1-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 ... 1956
MADRAS



3L
ण211, N1223M
N55 32.12
18397

# க்ஷேமலாபங்கள்

மோகினியின் வாசக அன்பர்களுக்கு வந்தனம். உபயகுசலம். ஸ்ரீதேசாரிமனின் பரம கருணை கடாக்ஷத்தினாலும் அன்பர்களின் பேராதரவினாலும் ஜகன்மோகினிக்கு இம்மாதத்துடன் 32ம் ஆண்டு பூர்த்தியாகி 33வது ஆண்டு ஜனவரி '56வது வருஷத்தில் பிறக்கப்போகின்ற சந்தோஷச் செய்தியை உங்களுக்கு மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. சென்ற இதழில் நேயர்கள் சிலர் கேட்டிருந்த கேள்விகளுக்கு பதில் கல்கி கல்யாண மண்டபத்தைப்பற்றித்தெரிவித்திருந்ததை ஆமோதித்துப் பாராட்டி அனேகர் நேரிலும் கடிதமூலமும் தெரிவித்திருப்பதற்கு மகிழ்ச்சியுடன் வந்தனமளிக்கின்றேன். கல்கியவர்கள் மறைந்த திதி நாளை ஒட்டி மறுநாள் நடந்தஆசீர்வாதத்தினத்தன்று (25–11–55) அவர்கள் அழைத்திருந்தபடி சென்றிருந்தேன். இந்த எனது கருத்தை அங்குக் கூடியிருந்தவர்களிடம் தெரிவிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. பேசினேன். ஸ்ரீமதி கல்கி, ஸ்ரீமதி பட்டம்மாள் வாஸன், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஸதாசிவன் இன்னும் பலர்—வைதீக கோஷ்டியினரில் சிலர், ஆக அனேகர் இந்தக் கருத்தைப் பாராட்டி மிக்க உத்ஸாகத்துடன பேசும்போது என் கண்களுக்கு அங்கு மாலையும் அலங்காரமுமாக வைக்கப்பட்டிருந்த ஸ்ரீகல்கியின் உருவப்படம் படமாகத் தோன்றாமல் உண்மை உருவம்போலவே சிரித்த முகத்துடன் அவரும் ஆமோதிப்பது போன்ற ஒரு உணர்ச்சி என்னிதயத்தில் தோன்றியது.

2. சென்ற இதழில் போலீஸ் உத்யோகம் முதலியவைகளைப் பெண்கள் வகிப்பது கூடாது என்று எழுதியிருந்ததை ஆதரித்துப் பலரும் எதிர்த்துச் சிலரும் தமது அபிப்ராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவரவர்களின் அபிப்பிராயத்தைச் சொல்வதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டல்லவா! அதன்படி என்னுடைய அபிப்ராயத்தைச் சொன்னேன்; அதைமாற்றிக்கொள்ள நான் தயாராக இல்லை என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சென்ற இதழின் அறிவுப்போட்டியில் அநேக சகோதர சகோதரிகள் மூன்றிலும் சரியான விடையனுப்பியிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் அவர்களில் சிலர் ஜகன மோகினி கூபனிலேயே எழுதியனுப்பாமல் தனிக்காகிததத்தில் எழுதியிருக்கிறார்கள். தயவுசெய்து கூபனிலேயே எழுதிகூட ஒரு சிறு காகிதத்தில் விலாஸமும், சரியான விடைகளையும் எழுதியனுப்பக் கோருகிறேன். [விடை வேறு பக்கம் காண்க.]

4. 33-வது வருஷ மோகினியில் புதிய தொடர்கதை வருமா? ராஜாராம் நாயுடுவின் சரிதையே வருமா? கதை முடிவு பாகம் ஏற்படவில்லையே! என்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். ராஜாராம் நாயுடுவின சரிதைதான் தொடர்ந்து வரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கமாக வரும் சில விஷயங்களைத் தவிர மோகினி புதிய அம்சங்கள் சிலவற்றுடன் ஆசி பெறுவதற்கு வருவாள். உங்கள் பேராதரவையும், அன்பையும் அளித்து உதவ வேண்டுகிறேன்.

—ஆசிரியை.

ஜகன்மோகினி

# இந்தோ ஸோவியத் நல்லுறவு.

இந்தோ ஸோவியத் நல்லுறவை நிரூபிக்கவும் நிலை நாட்டவும் நடத்திய 1955-வருடத்திய பரஸ்பர விஜயங்கள் உலக சரித்திரத்தில் முக்கிய இடம் பெறக்கூடிய நிகழ்ச்சிகளாகும்.

நேருஜியின் ரஷ்ய விஜயத்தைக் குறித்துப் பத்திரிகைகளிலும் செய்திப் படங்களிலும் கண்டுகளித்த நம் மக்கள், நமது மாபெரும் தலைவருக்கு ரஷ்ய மக்கள் அளித்த இணையற்ற வரவேற்புக்கு நன்றி செலுத்தும் முறையில் ரஷ்யத் தலைவர்களுக்குப் பதில் வரவேற்பளிப்பதற்குக் கடமைப்பட்டிருப்பதை உணர்ந்து, சிறிதும் சளைக்காமல், நன்றிக் கடனை நிறைவேற்றினார்கள்.

ஸோவியத் பிரதமமந்திரி ஸ்ரீ புல்கானின் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி ஸ்ரீ க்ருஷே அவர்களும், ஒரு நல்லுறவு கோஷ்டியுடன் நம நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார்கள். அவர்கள் சென்ற திங்களன்று (28—11—55) நம் சென்னை மாநகருக்கு விஜயம் செய்தபோது, ரஷ்ய மக்களுக்குத் தமிழ் நாட்டினர் நல்லெண்ணத்தில் சளைத்தவர்களல்ல என்பதைக் கண்டு குதுகலித்தார்கள்.

உலக சமாதானத்துக்கு இந்திய ஸோவியத் நட்புறவு எவ்வளவு இன்றியமையாதது என்பதை இருநாட்டுத் தலைவர்களும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் அறிவுறுத்தி வருகிறார்கள். இதன விளைவாக சர்வதேச அரங்கில் மகத்தான மனப்பான்மை மாறுதல்கள் தோன்றி வருவதும், இந்நாட்டில், கம்யூனிஸ்ட் கட்சியின கொள்கைகளில் ஓரளவு தேசிய கௌரவ மனப்பான்மை தோன்றியுள்ளதும் நல்ல அறிகுறிகள்.

வாழ்க உலக சமாதானம்! வளர்க இந்திய ஸோவியத் நட்பு!

— வை. மு. ஸ்ரீ.

# பகவத்விஷய ரஸாநுபவம்

ஸ்ரீகாஞ்சீ மஹா வித்வான் ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

எளியனா யிருக்கும் தன்மையை இயற்கையாக வுடையவனென்கிறார். கீழ்ப்பாட்டில் "பத்துடையடிவர்க்கு எளியவன்" என்று சொன்னது பாங்கல்லவென்று திருவுள்ளம். ஸ்நேஹிகளுக்கு ஸௌலபனாயிருப்பவனென்றால் இதுவொரு குணமோ வென்பார் போல "எளிவருமியல்வினன்" என்கிறார்.

முதற்பத்து—மூன்றும் பதிகம்—இரண்டாம் பாட்டு.

எளிவருமியல்வினன் நிலைவரம்பிலபலபிறப்பாய்
ஒளிவருமுழுநலம் முதலிலகேடிலவீடாம்
தெளிதருநிலைமையதொழிவிலன் முழுவதுமிறையோன்
அளிவருமருளினோடு அகத்தனன்புறத்தனனமைந்தே. 2.

இப்பாசுரத்தில் பல விசேஷப் பொருள்கள் அமைந்திருக்குமாற்றைக் குறிக்கொள்ளவேணும். * எளிவருமியல்வினனென்றது முதல் விசேஷம். "பத்துடையடியவர்க் கெளியவன்" என்று கீழ்ப் பாட்டிற் சொல்லிற்று; பக்தர்களுக்கு ஸௌலபன் என்று சொல்லுவதில் விசேஷமில்லை யென்று திருவுள்ளம் பற்றிய ஆழ்வார் 'எளிவருமியல்வினன்" என்று—எளிமையையே இயல்வாகக் கொண்டவன் என்றார். அப்படியாகில் எல்லார்க்கும் எளியனாக வேணுமே யென்னில்; நமக்கு எளியனாக வேணுமென்று யார் நினைத்தாலும் எளியனாகத் தட்டில்லை; அத்தகைய விருப்பமில்லையாகி இழந்தார்களாகில் அதற்கு அவன் செய்வது யாது? 'இன்னார்க்கு நான் எளியனாவேன், இன்னார்க்கு எளியனாகேன்' என்று அவனுடைய திருவுள்ளத்தில் ஒரு நியதி கொள்ளப்பட்டிருக்கவில்லை யென்க.

நிலைவரம்பில பல பிறப்பாய்=நிலையும் வரம்புமில்லாத பல பிறப்பும் பிறப்பவன். நிலையில்லாதனவும் வரம்பில்லாதனவுமான பலவகைப்பட்ட அவதாரங்களைச் செய்பவனென்றால் என்ன கருத்து? என்னில்; கேண்மின். பகவான் அவதாரம் செய்யுமிடத்து இன்ன யோனியில்தான் அவதாரஞ் செய்வதென்று ஒரு வியவஸ்தை கொள்ளாமையாலே இதுதான் பிறப்பில் நிலையில்லாமையாவது; இன்னவிதமான சேஷ்டிதந்தான் செய்வதென்று ஒரு வியவஸ்தை கொள்ளாமையாலே இதுதான் பிறப்பில் வரம்பில்லாமையாவது. ஆக இப்படி ஒரு நிர்வாஹம். மற்றொரு வகையாகவும நிர்வஹிப்பதுண்டு; அதாவது, நிலையில்லாமை, வரம்பில்லாமை என்ற இரண்டனுள் நிலையில்லாமை யென்பதற்கே கீழ்ச் சொன்ன இரண்டையும் பொருளாகக் கொள்வது; இனி வரம்பில்லாமையாவது, அவதரித்து எளியனாய் நின்ற நிலை

18317.

தன்னிலே மேன்மையும் தோற்ற நிற்றலாம். அர்ஜுனனுக்குச் சாரதியாயிருந்து தாழ நிற்கச் செய்தேயும் விச்வரூபம் காட்டினமை காணாநின்றோம். சிவபிரான் பக்கல் புத்திர வரம் வேண்டிப் போகா நிற்கச் செய்தே கண்டாகரணனுக்கு முத்தியளித்தமை கேளா நின்றோம். கஞ்சனுக்கு அஞ்சி யொளித்து வளரா நிற்கச் செய்தே ஏழு பிராயத்திலே * அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறு மடங்கப் பொட்டத் துற்றிக் கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்து நின்றமை முதலான மற்றும் பலபல சரித்திரங்கள் காணலாம்.

பல பிறப்பாய் = எம்பெருமான் பத்து அவதாரங்கள் செய்தருளினதாகச் சொல்லிப் போருவதுண்டு; *பத்தினாய தோற்றமோடு* என்றார் திருமழிசைப்பிரான்; திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் எட்டாம் பத்திலும் பதினோராம் பத்திலும் தசாவதாரப் பதிகங்கள் இரண்டு பாடியுள்ளார். ஆசாரியர்கள் வடமொழியில் தசாவதார ஸ்தோத்திரங்கள் பணித்துள்ளார்கள். இவற்றால் எம்பெருமானுடைய திருவவதாரங்கள் பத்தேயென்று கருதலாகாது. * மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனாய்த் தானாய்ப், பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியுமானான் * என்று மத்ஸ்ய கூர்மாதி தசாவதாரங்கள் சொன்னது, அநுஸந்திப்பதன் ஸௌகரியத்திற்காக வத்தனை. பெருமான் செய்தருளின அவதாரங்கள் எண்ணிறந்தவை. இதைப் பற்றி வேதம் சொல்லும்போது * அஜாயமானோ பஹுதா விஜாயதே* என்றது. இதில் "பஹுதா" என்றதே யொழிய "தசதா" என்றதில்லை. பகவத்கீதையிலும் தானே சோதிவாய் திறந்து சொல்லுமிடத்து "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்று சொல்லி வைத்திருக்கக் காண்கிறோம். இவற்றை யடியொற்றி நம்மாழ்வார் திருவிருத்தமாகிய முதற்பிரபந்தம் தொடங்கும் போதே "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா" என்றருளிச் செய்தார்; இங்கும் "பல பிறப்பாய்" என்றே யருளிச் செய்கிறார். கருமமடியாகப் பிறக்கின்ற நம்முடைய பிறவிக்கு ஒரு எல்லை ஏற்பட்டாலும் கருணையே காரணமாகப் பிறக்கின்ற அவனுடைய பிறவிகட்கு ஒரு நாளும் முற்றுப்புள்ளியிட இயலாதென்க.

பிறப்பு என்பது கருமத்தினாலேற்பட்டாலென்ன? கருணையினாலேற்பட்டாலென்ன? பிறப்பது இழிவான செயல்தானே? ஹேயங்களுக்கு எதிர்த்தட்டான பகவான் எதுக்குப் பிறக்க வேணும். பிறந்து செய்ய நினைத்த காரியங்களைத் தனது ஸங்கல்ப சக்தியினாலேயே செய்து தலைக்கட்டலாமே. ஸங்கல்பத்தினாலாகாதது எதுவுமில்லையே; அப்படியிருக்க, பலவகைக் கஷ்டங்களை யநுபவிப்பதற்கு உறுப்பான பிறப்பை எதற்காக எடுக்க வேணுமென்கிற சங்கை வலிதாக வுண்டாகும். இதைப்பற்றி இப்போது சுருக்கமாகச் சொல்லுகிறோம்; பகவான் திருக்கல்யாணகுணங்கட்குக் கடல்போன்றவன்; அத்திருக்குணங்களை வெளிக்காட்டாமல் உள்ளே அடக்கிவைத்திருக்க முடியாது. அவதாரங்கள்

செய்யாமல் அவற்றை எப்படி வெளிக்காட்ட முடியும்? முடியாது. ஆகவே பகவான் தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் தயை வாத்ஸல்யம் க்ஷமை முதலான திருக்குணங்களை அடியார்களிடத்துக் காட்டித் தானும் ஆனந்தித்து அவர்களையும் ஆனந்திப்பிக்க வேண்டியே அவதாரங்கள் செய்தருள்கின்றுனென்று கொள்ளக் கடவது.

ஏன்? இக்குணங்களை ஸ்ரீவைகுண்டத்திலே நித்யமுக்தர்களிடத்தே காட்டலாகாதோ வென்னில்; அங்கே காட்ட முடியாதென்பதை நிரூபிக்கிறோம் காண்மின். ஸௌசீல்யமென்னுங் குணத்தைக் காட்ட வேண்டுமானால் மந்தர்களிடத்திலேயன்றோ காட்டவேண்டும்; மஹானாயிருப்பவன் தன்னுடைய மஹத்துவத்தைக் கணிசியாமல் மந்தர்களோடு புரையறக் கலந்து பரிமாறுகையே ஸௌசீல்யமாதலாலும், * தம்மையே யொக்க அருள் செய்தவிடமான திருநாட்டிலே மந்தர்களில்லாமையாலும் அங்கு ஸௌசீல்யத்தைக் காட்டமுடியாதென்று முடிந்தது. இனி தயா குணத்தை யெடுத்துக்கொள்வோம்; தயையாவது பிறர் துக்கங்கண்டு பொறுத்திருக்கமாட்டாமை; * நலமந்தமில்லதோர் நாடாகிய திருநாட்டிலே துக்கப்படுகிறவர் ஒருவருமில்லாமையாலே, துக்கப்படுகிறவர்களிடத்திலேயே விலை செல்லக்கடவதான தயாகுணத்தையும் அங்குக் காட்டமுடியாதென்று முடிந்தது. இனி வாத்ஸல்யமென்னுங் குணத்தை யெடுத்துக்கொள்வோம்; வாத்ஸல்யமாவது குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுகை. குற்றஞ் செய்பவர்கள் இந்நிலத்தில் மலிந்திருக்கிறார்களேயல்லது திருநாட்டிலே குற்றவாளியான வொருவரும் காணக்கிடைமாரன்றோ. ஆகவே வாத்ஸல்ய குணமும் அங்குக் காட்ட முடியாததாயிற்று. இங்ஙனே ஒவ்வொரு குணமும் திருநாட்டிலே பிரகாசிக்க விரகில்லையாம். பரத்வம், ஸ்வாமித்வம் என்கிற குணமே அங்குத் தலையெடுத்து விளங்குவதாகும். எம்பெருமானுக்கு அதில் த்ருப்தி லேசமுமில்லையன்றோ. எந்தத் திருக்குணங்களில் அவனுக்குப் பரமத்ருப்தியோ அவை இவ்விருள் தருமா ஞாலத்தில்தான் விளக்க முறுமாதலால் அதற்காகவே அடுத்தடுத்து இந்நிலத்தே அவதாரஞ் செய்கின்றுன்.

நாம் பிறக்கப் பிறக்கப் புகாழிந்து வாராநின்றோம்; அங்ஙனல்லாமல் எம்பெருமான் தான் பிறக்கப்பிறக்கப் புகர்மிக்கு விளங்குவன். திருக்குணங்கள் சாணையிலிட்டமாணிக்கம்போலே மிகமிக விளங்கப்பெறுவதுதான் எம்பெருமான் புகர்மிக்கு விளங்குவதென்பது. இதுவே இப்பாட்டில் "பல பிறப்பாயொளிவருமுழுநலம்" என்பதனுல் தெரிவிக்கப்படுகிறது. வேதத்தில் "ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:" என்கிற வாக்கியத்தினுல் சொல்லப்பட்ட பொருள் இது. பகவான் அவதாரங்கள் செய்தே ஒளி மல்கப் பெறுகிறுனென்பது மேலெடுத்த வேதவாக்கியத்தின் பொருள்.

இத்திருக்கலியாண குணங்கள் ஒரு நாளிலே தோன்றி ஒரு நாள்வரையிலே முடியுமவை யல்லாமல் எப்போதும் ஸ்வ

ரூபத்தைப்பற்றி யிருக்குமவை என்று தெரிவிப்பது "முதலில கேடில" என்பது.

இதற்குமேல், விசிஷ்டாத்வைத தரிசனத்திற்கு மிகவும் அந்தரங்கமான ஓர் அர்த்தம் தெரிவிக்கப்படுகிறது "வீடாம் தெளிதரு நிலைமையது முழுவதும் ஒழிவிலன்" என்பதனால். பரப்ரம்மத்திற்கு லக்ஷணம் சொல்ல வந்த உபநிஷத்தானது "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" இத்யாதி வாக்யங்களினால் பகவானுக்கு மூன்று காரியங்களையே தெரிவிக்கின்றது; ஸகலப் பிரபஞ்சங்களையும் படைத்தல் காத்தல் அழித்தல் என்கிற மூன்று காரியங்கள் பகவானால் செய்யப்படுகின்றன வென்று ஓதிற்று.

ஆனால் இம்மூன்று காரியங்கள் மட்டுமேயல்ல; வேறு சில காரியங்களுமுண்டு; அவற்றுள் தலைமையானது மோக்ஷப்ரதத்வம்; அதாவது சில அதிகாரி விசேஷங்களுக்கு மோக்ஷங் கொடுத்தல். இதை முன் சொன்ன மூன்று காரியங்களுள் ரக்ஷணத்திலோ ஸம்ஹாரத்திலோ அடக்கிவிடலாமானாலும் ஆளவந்தார் எம்பெருமானார் போன்ற நம்பூருவாசாரியர்கள் இதைத் தனிப்படவே பேசுகின்றனர். ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்னத்தில் "த்வதாச்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதிப்ரணாச ஸம்ஸார விமோசந" என்றருளிச் செய்திருக்கிறார். இதில் ஸம்ஸார விமோசனமென்றது மோக்ஷப்ரதத்வமென்றபடி.

ஸ்ரீ பாஷ்யகாரரான ஸ்ரீராமாநுஜரும் ஸ்ரீபாஷ்யத்திற்கு மங்கள ச்லோகமாக இட்ட * அகிலபுவந ஜந்ம ஸ்தேமபங்காதிலீலே * என்னும் ச்லோகத்தில் இந்த முதற்பாதத்தில் ஜகஜ் ஜன்மஸ்திதி லயங்களை யருளிச்செய்தார். ஸ்திதியாவது ரக்ஷணம். இது முதற்பாதத்திலேயே சொல்லி முடிக்கப்பட்டிருந்தும் "விநத விவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே" என்று தனிப்பட இரண்டாவது பாதமருளிச் செய்திருக்கிறார்; இதிலும் ரக்ஷணந்தான் சொல்லப் படுகிறது. முதலடியிலேயே சொல்லப்பட்டிருக்கிற ரக்ஷணத்தை மீண்டும் சொல்லியிருப்பது எதற்காக வென்று ஆலோசிக்க வேணும். ஸ்ரீபாஷ்யத்திற்கு வியாக்கியானமான சிருதப்ரகாசிகை யில் தெளிவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாவது பாதத்தில் சொன்ன ரக்ஷகத்வமானது முதற் பாதத்திற் சொன்ன ரக்ஷணத்திற் காட்டிலும் வேறுபட்டது. அது பொதுவான ரக்ஷணம்; இது சிறப்பான ரக்ஷணமாகிய மோக்ஷமளித்தல்.

ஸாமான்யத்திலேயே விசேஷத்தையும் அடக்கி விடுகிற முறையில் தனிப்படச் சொல்ல வேண்டியதில்லையாயிருக்க, இங்குத் தனிப்படச் சொன்னது ஏனென்னில், மோக்ஷமளித்த லென்பது சாஸ்த்ரத்திற்குப் பரமப்ரயோஜனமாகையாலே தனிப் படவே சொல்ல வேண்டியதாயிற்று என்று சிருதப்ரகாசிகாசார்யர் கூறியுள்ளார். இதற்கெல்லாம் மூல 5 நம்மாழ்வாருடைய இந்தப் பாசுரமேயாகும்.

இங்கு "வீடாங்தெளிதரு நிலைமையதொழிவிலன்" என்றது— மோக்ஷமாகிற தெளிந்த நிலத்தைத் தருவதான அந்த ஸ்வ பாவத்தை [அதாவது, மோக்ஷ ப்ரதத்வத்தை] எப்போது முடையவன் என்றபடி. இதனை ஆழ்வார் தனிப்பட அருளிச் செய்யவேதான் ஆளவந்தாரும் எம்பெருமானாரும் தனிப்பட அருளிச்செய்து போந்தார்களென்பது குறிக் கொள்ளத்தக்கது.

"வீடாங் தெளி தரு" என்ற விடத்தில் 'தெளிவு' என்னுஞ் சொல் தேளி என்று குறைந்து கிடக்கின்றது. பரமபதத்தைத் 'தெளிவிசும்பு' என்றே வழங்குவர்—தெளிவே வடிவெடுத்திருக்கு மிடமாதல் பற்றி. இந்த லீலா விபூதி கலக்கத்திற்கே ஏற்பட்டது போல அந்த நித்ய விபூதி தெளிவுக்கே ஏற்பட்ட தென்றுணர்க. தெளிவுடைய பெருமான் இங்கே வந்து அவதரித்தால் அவனை யும் சோகமோஹங்கள் கொள்விக்கும் இவ்விடம். கலக்கமே வடிவான நாம் அங்கே சென்றால் நம்மைத் தெளிவுறுத்தும் அவ் விடம்.

இனி ஈற்றடி "அளிவருமருளினோடு அகத்தனன் புறத்தனன் அமைந்தே" என்பது; இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் அளிந்த அருளோடு கூடி அடியார்களுக்கு அந்தரங்கனையும், மற்றை யோர்க்குக் கிட்டவொண்ணுதபடியனையுமிருப்பன்: பாண்டவர் போல் வார்க்குக் கையாளாயிருந்து துரியோதனுதியர்க்கு ஆளிட்டு விடுவன் என்றவாறு. (தொடரும்.)

---

# அறிவுப் போட்டி நெ. 3.

1—திருமாலும் சிவனும் போற்றும் பக்தன்.
2—ஆனையும் கடுங்கும ஜீவன்.
3—பெரும்பாலாரின் மணவாழ்க்கையின் எதிரி.

மேலே உள்ள மூன்று விஷயங்களும் கீழே உள்ள 6 வரிகளில் ஒளிந்திருக்கின் றன. ஒன்றுமட்டும் 5 வரிகளில் மறைந் திருக்கின்றது. வழக்கப்படி கண்டு பிடிக் கவும்.

1—ஸர்வ மங்களமே சிறந்த வாழ்வு.
2—பற்றிலா உத்தமர் பரம குருவாம்.
3—பரமனின் பதமின்றி மற்றெல்லாம் வீணே.
4—பக்ஷிகள் ராஜனே பெரிய திருவடியாம்.
5—பஜனம்ருதமே இணையற்ற இன்பம்.
6—அன்புமயமே அகில உலகம்.

# பொறாமையின் பயன்

பீமபுரத்தை ஆண்ட பீமவர்மன் தயாள குணமுடைய அரசன். அவன் இதுவரை ஒருபொழுதும் நீதி தவறியதே இல்லை. அவனைத் தெரியாத அரசர்களே இல்லை. அவன் சகல கலைகளையும் அறிந்திருந்தான்.

ஒரு சமயம் தன் அரண்மனையிலுள்ள வராந்தாவில் உணவருந்திவிட்டு, வெற்றிலைபாக்கு போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டே கீழே யார் வருகிறார்கள் என்பதைப் பார்க்காமல் எச்சில் துப்பிவிட்டான். அவன் துப்பிய எச்சில் கீழே வந்து கொண்டிருந்த மந்திரியின் மீது விழுந்துவிட்டது. மந்திரி ஆத்திரத்துடன் மேலே வந்தான்; அரசனைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்து 'யார் என் மேல் எச்சில் துப்பியது?' என்று படபடப்பாகக் கேட்டான். அரசர் எல்லோர் எதிரிலும் தான் துப்பியதாகக் கூற இஷ்டப்படவில்லை. அங்கு வேலைக்காரனாக இருந்த கண்ணன் அவன் எச்சில் துப்பியது முதல் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். அரசனது நிலையைக் கவனித்த அவன், மந்திரியின் முன் வந்து 'நான் தான் கவனிக்காமல் துப்பிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்' என்று கூறினான். மந்திரியின் கோபம் அதிகமாகிவிட்டது. 'என்னை அவமதிப்பதற்காகத்தானே எச்சில் துப்பினாய்!' என்று கண்ணனிடம் ஓடிவந்தான். அரசன் பீமவர்மன் மந்திரியைச் சமாதானம் செய்தான். 'அவன் வேண்டுமென்று துப்பினான். கவனிக்காமல் துப்பிவிட்டான். நீ எனக்காக அவனைக் கோவிக்காதே' என்று அரசன் கூறினான். வெகு நாட்களாக அரசனது அன்பைப் பெறவேண்டும் என்றிருந்த கண்ணன் இச் செய்கையினால் அரசனது அன்பிற்குப் பாத்திரமானான். அரசனது மானத்தைக் காப்பாற்றி தன் மேல் தவறைப் போட்டுக் கொண்டதற்காக அரசன் தனது பரிசாக நாலு தங்க நாணயங்களைக் கண்ணனுக்குக் கொடுத்தான்.

அவ்வரண்மனையிலேயே வேலைசெய்யும் அநேக ஆட்களில் கோபாலனும் ஒருவன். அவனுக்கு எப்பொழுதும் கண்ணனைக் கண்டால் பொறாமை. கண்ணனை எந்தவிதத்திலா

வது அவன் பழித்துக்கொண்டே இருப்பான். ஒருநாள் கண்ணனுக்கு அரசன் நூறு தங்க நாணயங்களைக் கொடுத்ததையும், அவன் அரசனது அன்பிற்குப் பாத்திரமானதையும் அறிந்தான். அவனுக்குக் கண்ணன் மேலிருந்த பொறாமை பன்மடங்காகியது. அவன் மந்திரியின் மேல் எச்சில் துப்பியதால்தான் இவ்வளவு மேன்மையை அடைந்திருக்கிறான். அதனால் நாமும் அவ்வாறே செய்யலாம்; நமக்கும் வெகுமதிகிடைக்கும் என்று எண்ணினான்.

மறுநாள் கோபாலன் மாடிவராந்தாவில் நின்றுக்கொண்டு அரசனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மந்திரி வந்ததும் அவன்மேல் எச்சில் துப்பினான். மந்திரி மிகுந்த கோபத்துடன் மாடிக்குவந்தான். ஆத்திரத்துடன் யார் என்மேல் எச்சில் உமிழ்ந்தது. என்றுகேட்டான். தனக்கும் வெகுமதி கிடைக்கும் என்கிற சந்தோஷத்தால் கோபாலன் அவசரமாக மந்திரி முன்வந்து நான்தான் தெரியாமல் துப்பி விட்டேன். மன்னித்துவிடுங்கள் என்று கூறினான். மந்திரி ஆத்திரத்துடன் ஓடிவந்து ஓர் அறைவிட்டான். கோபாலன் அரசனை நோக்கினான். அரசனும் கோபமடைந்து 'மந்திரியை அவமானப் படுத்துவதற்காகத்தானே நீ எச்சில் துப்பினாய். உனக்குத் தகுந்த தண்டனை அளிக்கிறேன்' என்று கூறினான். உடனே அருகிலிருக்கும் காவலாளரைக் கூப்பிட்டு இவனுக்கு ஜாட்டியால் நையப் புடைத்து வெளியில் தள்ளுங்கள் என்று கூறினான். மேலும் உன்னை இன்றுமுதல் வேலையிலிருந்து நீக்கியாகிவிட்டது என்றும் கூறினான்.

மறுநாள் கோபாலன் அரசனிடம் 'கண்ணன் மந்திரியின் மேல் எச்சில் துப்பியதற்கு அவனுக்கு வெகுமதி கொடுத்தீர்கள். நான் துப்பியதற்கு மட்டும் ஏன் தண்டனை அளித்தீர்கள்?' என்று கேட்டான். அதைக்கேட்ட அரசன் கண்ணன் உண்மையாக எச்சில் துப்பவில்லை. என் மானத்தைக் காப்பாற்ற தவறைத் தன்மேல் கூறினான். அதனால் வெகுமதி அளித்தேன். ஆனால் நீ அவன் அடைந்துவிட்டானே என்ற பொறாமையினால் எச்சில் துப்பி மந்திரியை அவமதித்ததால் உனக்கு தண்டனை அளித்தேன். அவனது நற்குணத்தின் பயனை அவன் அடைந்தான். உனது பொறாமையின் பயனை நீ அடைந்தாய் என்று அரசன் பீமவர்மன் கூறினான். இதைக் கேட்ட கோபாலன் வெட்கி தலைகுனிந்தான். அதிலிருந்து அவன் பொறாமைப் படுவதை நிறுத்திக்கொண்டான்.

# மேனாட்டுத் தத்துவம்

இரண்டாம் பாகம்

## ஸிம்போஸியம்; பேட்ரஸ்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

### பிளேட்டோ கண்ட சட்டங்கள் (Laws)

'சட்டங்கள் என்ற நூலை பிளேட்டோ எழுதினாரா? இல்லையா? என்ற ஐயத்தைச் சிலர் தூண்டிவிட்டனர். இந்நூலை மிகக் கவின்பெற மொழி பெயர்த்த ஜோவட் (Jowett) என்ற பெரியார் தக்க காரணங்கொண்டு 'இந்நூல் அவரால்தான் எழுதப் பட்டது; இதில் யாதொரு சந்தேகமுமில்லை'' என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். அரிஸ்டாடில் எழுதிய நூல்களில் சட்டங்களிலிருந்து பன்னிரண்டு மேற்கோளகளுக்குமேல் இடம் பெறுகின்றன. ஐஸாசிரிடீஸ் (Isocrates) என்றவர் 346 கி.மு.வில்—அதாவது பிளேட்டோ இறந்த மறு ஆண்டில்—இந்நூலைப்பற்றிப் பேசிய செய்தியும் நமக்குக் கிடைக்கின்றது. அலெக்சிஸ் (Alexis) என்ற நகைச்சுவைக் கவிஞனும் இந்நூலைப்பற்றிக் கூறுகின்றான் என்பதையும் நாம் நன்கறிவோம்.

மூன்று பேர்கள் பேச்சை நடத்துகின்றனர். ஒருவன் ஏதன்ஸ் நகரைச்சார்ந்தவன்; மற்றொருவன ஒரு இஸ்பார்டன். மூன்றாம்மனிதனோ ஒரு கிரீடின். பேச்சோ கிரீடில் நிகழ்கின்றது. இம்மூவரும் வயது முதிர்ந்தவர்கள். தங்கள் பழுத்த அனுபவ நிலையில் நின்றுதான் பொருள்களை ஆராய்ச்சி செய்கின்றனர். இந்நூலை எழுதுகிறபொழுது பிளேட்டோவுக்கு சுமார் 74 வயதிருக்கும். இந்நூல் பன்னிரண்டு பிரிவுகளை உடையது. வாழ்க்கையின கெடுதல்களின் வேர்களை இந்நூலைப்போல பிளேட்டோ சமைத்த வேறு எந்த நூலும் துருவி ஆராயவில்லை. குடியரசைப்போல இது ஒரு கனவுச் சித்திரமன்று. கனவையும் ஒரு நனவாக ஆக்க வேண்டுமென்பதே பிளேட்டோவின் திருவுள்ளமாகும்; உடலைக் காட்டிலும் அகவுயிரைப் பேணவேண்டும்; அகவுயிரைக் காட்டிலும் ஆண்டவனைப் பேணவேண்டும் என்ற ஆதார சுருதி இந்நூலில் எங்கும் ஒலிக்கக் கேட்கின்றோம்.

பிளேட்டோ படைத்த இப்பேச்சில் ஏதன்ஸ் நகரத்தான் எதையும் விரிவாகக் கூறும் தன் இயல்பை ஒப்புக்கொள்ளுகிறான். இஸ்பார்டன் சொற் சிக்கனத்திற்குப் பெயர் வாய்ந்தவன. ஆனால் சிற்சில வேளைகளில் விரிவாக கூறவேண்டிய நிகழ்ச்சியும் வாழ்க்கையில் உண்டு என்றதை அவன் ஏற்கின்றான்.

இந்நூலின் நான்கு பிரிவுகள் இதற்கு ஒரு முன்னுரையாகக் கருதப்படும். இப்பிரிவுகளில் காணப்படும் பொருள்கள் ஆராய்ச்சிக்குரியவை. இஸ்பார்டாவிலும் கிரீட்டிலும் போர்க் கலையை வளர்ப்பதற்காகவே சமுதாய திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன: போரில் காட்டப்படும் வீரமே வீரம்; தைரியமே தைரியம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இத்தகைய கொள்கையை ஏதன்ஸ் நகரத்தான் ஒப்புக்கொள்ளவில்லை. எல்லாவித குணங்களும் நாட்டில் மலரவேண்டு மென்பதுதான் அவன் கண்ட கனவாகும். வெறும் தைரியம் மட்டும் போதாது; அடக்கமும் மிதமும் வேண்டும். மிதத்தைப்பற்றிப் பகவத்கீதை பல இடங்களில் பேசுவதை நாம் கண்டிருக்கிறோம். போரில் புகழ் மட்டும் பெற்றால் என்ன பயனைத் தரும்? வாழ்க்கைப் புயல்களை எதிர்த்து அதைச் செவ்வனே நடத்துவதுதான் சிறந்த ஆண்மையாகும். போரைக் காட்டிலும் அமைதியைத்தான் ஒருவன் விரும்பவேண்டும். பகைவனைத் தோற்கடிப்பதைக் காட்டிலும் அவனை ஒரு நண்பனாக ஆக்கமுயல்வதே சாலச் சிறந்தாகும். இன்ப துன்பங்களிடையே மனிதன் அமைதியையும்மிதத்தையும் அடைகின்றான் என்றதைச் சோதிக்க வேண்டும். இவைகளை விட்டு ஓடி உய்வதைக் காட்டிலும், இவைகளின் நடுவே நின்று தன் மன ஆற்றலைக் காண்பிப்பதே உண்மையான வீரம். அஞ்சுவதற்கு அஞ்சுவதுதான் தைரியம். உண்மையான தைரியத்தையும் உவந்து காட்டுவதே ஓர் உத்தமனின் இலக்கணமன்றோ.

இரண்டாம் பிரிவில் கல்வி ஆராயப்படுகின்றது. இன்பத்திலும் ஓர் உண்மையான பயிற்சி வேண்டுமே. பாட்டும் கூத்தும் தேவை. ஆனால் இப்பாட்டும் கூத்தும் மக்கள் விருப்பப்படி நடத்தப்படா. சிறுவர்கள், சிறுமிகள், முதிர்ந்தவர்கள் — இவர்கள் யாவரும் சேர்ந்து ஒரு குழுவாகப் பாடுவார்கள். ஒரே சுருதியில் பாட்டு எழும். அறந்தான இன்பம்; அறந்தான் இன்பம் என்ற பல்லவி எங்கும் கேட்கும்.

மூன்றும் பிரிவில் சமுதாயத்தின் மூலத்தைப்பற்றி ஆராய்கின்றார். குடும்பம் முதலில் தோன்றுகிறது; பல குடும்பங்கள் ஒரு தலைவனின்கீழ் அடங்கிக் கிடக்கிற நிலையைச் சித்திரிக்கிறார். எப்படி ஈலியம்போன்ற நகரங்கள் தோன்றுகின்றன என்றதையும் நமக்குக் காட்டுகின்றார். மிதமற்ற அதிகார ஆட்சியும் அழிந்துவிடும்; அளவுகடந்த சுதந்திரத்தை விரும்புகிற மக்களும் மாய்ந்து போய்விடுவார்கள். அதிகாரமும், சுதந்திரமும் முரண்படாது திகழ்கின்ற ஒரு சமுதாயந்தான நிலைத்து நிற்கும் என்றதை விளக்கியிருக்கிறார். இஸ்பார்ட்டாவின் அரசியலை அவர் மிகவும் வியந்திருக்கிறார் என்ற பொருளை முன்பே நாம் குறித்துள்ளோம். நான்காம் பிரிவில் மக்கள் குடியேறுதலின் நிலை சித்திரிக்கப்பட்டிருக்கிறது. விதி, கடவுள், சட்டம் அமைப்போனின் ஆற்றல் எல்லாம் சேர்ந்து சதிசெய்கின்ற காரணத்தால்தான் சமுதாயங்கள் தோன்றுகின்றன என்று பிளேட்டோ மொழிகின்றார். சிறந்த பகுத்தறிவிற்கும், சட்டத்திற்கும் வணக்கம் புரிகின்ற சான்றோர்

களே நாட்டை ஆள்கின்ற அதிகாரிகளாய்க் கருதப்பட வேண்டும். இத்தகைய அரசியலில் மக்கள் தெய்வத்திற்குப் பயந்து நடத்தல் முதல் அம்சமாகும். பெற்ரேர்களை வழிபடுதல் சிறந்த அறமாகக் கருதப்படும். அறத்தையும், நியாயத்தையும் நிறுவ வேண்டும்; இவைகளை மக்கள் மனக்கழனியில் வேரூன்ற வைத்துத் தழைக்கும்படி செய்வது நாட்டின் தலைவர்களின் கடமையாகும்..

ஐந்தாம் பிரிவின் தொடக்கம் அகவுயிரைப் பேணவேண்டும் என்று வற்புறுத்துகிறது. பெற்ரேர்கள், நண்பர்கள், யாசிக்கிற வர்கள், அன்னியர்கள்—இவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் அது சித்திரிக்கிறது.

5040 நகர மாந்தர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய வேண்டும். தங்கம், வெள்ளி இவைகளுக்கு இடமில்லை. மிதமான செல்வம் அவர்களிடத்தில் தோன்ற வேண்டும். எல்லாம் கணித முறையில் நடக்கும்படியான பாதையை அவர் வகுக்கின்ருர்.

மனிதன் உண்மையை நாடவேண்டும்; நியாயமான நெறியில் நடக்க வேண்டும். அழுக்காறு என்ற பெரும் நோய்க்கு இடம் தரக்கூடாது; பொதுவுடைமை என்ற லட்சியத்தை நல்குகின்ற லட்சிய நாடு இது அன்று. குடியரசில் காணப்படுகிற லட்சியத்திற்குச் சற்றுத் தாழ்ந்த லட்சியம்தான்.

ஆரும் பிரிவில் அரசியல் அமைப்பு அலர்கின்றது. எப்படிச் சட்டத்தைக் காப்பாற்றுகிறவர்கள், இராணுவத் தலைவர்கள், புரோகிதர்கள் முதலியவர்கள் நியமிக்கப்படவேண்டும் என்ற விஷயம் சிந்திக்கப்படுன்றது. மணத்தைப்பற்றிய விதிகள், குழந்தைகளைப் பெறுகிற விஷயத்தைப்பற்றிய விதிகள், மணச்சடங்குகள் நடக்க வேண்டிய வயதின் முடிவு—இவை யாவும் இப்பிரிவில் இடம் பெறுகின்றன.

ஏழாம் பிரிவில் மேலே குறிக்கப்பட்ட விஷயங்கள் சற்று விரிவடைகின்றன. கல்வி மனிதன் பிறந்த நாளிலேயே தொடங்குகின்றது. அவன் பிறப்பதற்கு முந்தியும் ஆரம்பிக்கின்றது என்று சொன்னுலும் பொருந்தும். சமுதாய வளர்ச்சிக்குத்தான் குழந்தைகள் என்றதை அழுத்தமாகச் சொல்லுகின்ருர். படிப்பின் முழுச் சர்ச்சையும் இதில் இடம் பெறுகின்றது என்று சாற்றலாம்.

எட்டாம் பகுதியில் திருவிழாக்கள், பந்தயங்கள், போர்க்கலைப் பயிற்சிகள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருக்க வேண்டிய தொடர்புகள், அளவுகடந்த பால் உணர்ச்சிகளால் வரும் நிலைகள், அவைகளை அகற்றக்கூடிய மாமருந்துகள்—இவைகள் கருதப்படுகின்றன.

எஞ்சி நின்ற பகுதிகளில் தெய்வங்களைப் புறக்கணிக்கும் குற்றம், கோயில்களிலுள்ள சொத்துக்களைக் களவாடும் குற்றம், கொலைக்குற்றம்—இவைகளுக்கு வேண்டிய பரிகாரங்கள், தண்டனைகள், குற்றங்களுக்காக மறுஉலகத்தில் கணக்கிலா இன்னல்கள் அடைவார்கள் என்று பேரச்சங்களைத் தரக்கூடிய முயற்சிகள்—இவ்வனைத்தும் பிளேட்டோவின் சிந்தையைக் கவர்கின்றன.

# கவலை

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

ராஜு அன்று மாலை ஆபீஸிலிருந்து திரும்பியவன், வீட்டினுள் நுழையும்பொழுது, வீட்டினுள்ளிருந்து ஒரு பெண் குங்குமச் சிமிழும், புத்தாடையுமாக வெளியே வருவதைக் கண்டான். அவனுடைய அத்தை காமாக்ஷியும் அவளை வழி அனுப்பிவிட்டு, "வாடா ராஜா, கைகால் அலம்பிண்டு. தோசை வார்த்து வைத்திருக்கிறேன்" என்று பகர்ந்து உள்ளே சென்றாள்.

ராஜுவும் உடையை மாற்றிக்கொண்டபின், கைகால் அலம்பிக்கொண்டு மணையில் வந்து அமரவே, காமாக்ஷியும் தோசையுடன் தாம்பாளத்தைக் கொணர்ந்து வைத்தாள். தோசையில் ஒரு விள்ளல் விண்டு மிளகாய்ப்பொடியில் தோய்த்து வாயில் போட்டுக்கொண்ட ராஜு "கடுதாசி ஏதாவது வந்ததா அத்தை?" என்று வினவினான்.

"காணோமே. எனக்கும் அதான் நாலு நாளாக விசாரமா இருக்கு". இதான் அவளுக்கு சரியான சமயம்......"

"சரி, பார்ப்போம்; சுவாமி இருக்கிறார்......யாரோ அழைத்துவிட்டுப் போனாப்பலே இருக்கே அத்தை?"

"அதுவா? மைலாப்பூர் வக்கீல் சேஷாத்திரியின் பெண் மைதிலி அழைக்க வந்திருந்தாள். அவள் தங்கையைக் கடத்தூர் துரைசாமியின் பிள்ளை வெங்குட்டுவுக்குக் கொடுக்கறாளாம்; வர வெள்ளிக்கிழமை கலியாணமாம்..."

"வெங்குட்டுவுக்கா? நாலு வருஷங்களுக்கு முன்பே அவனுக்குக் கலியாணம் ஆகிவிட்டதே!"

"இல்லேடா, அப்பனே. அவனுக்கு இது இரண்டாவது கலியாணம்னா. ஆறு மாதத்துக்கு முன்னால்தான் அவன் மனைவி பிரசவித்துப் போய்விட்டாளே."

"ஹும், அதற்குள் இன்னொரு கலியாணமோ?"

"பின்னே, என்ன புருஷாளுக்கு? பெண்டாட்டி செத்தால் புது மாப்பிள்ளை தானே!! என்று அத்தை கல்லிலிருந்து இன்னொரு தோசையை எடுத்து வந்து மருமானின் தட்டத்தில் போட்டவள், அவன் முகத்தைக் கண்டு திடுக்கிட்டு "ஏண்டா அப்பனே, உடம்புக்கு என்ன?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லே. ஆபீஸில் கொஞ்சம் வேலை ஜாஸ்தி. எனக்கு தோசை போதும் அத்தை" என்றான் ராஜகோபாலன்.

காப்பியைக் கலந்து கொண்டுவந்து கொடுத்தாள் அத்தை காப்பியைச் சாப்பிட்டவன் பேசாமல் எழுந்து சென்றான் ராஜு. தினம் வாய் நிறைய கலகலவென்று பேசும் ராஜு இன்று 'கம்' என்று எழுந்து சென்றது அத்தைக்கு என்னமோபோல் இருந்தது.

கூடத்தில் போய் நாற்காலியில் அமர்ந்தவனுக்கு பத்திரிகையைப் பார்க்கவும் தோன்றவில்லை, ரேடியோவை முடுக்கிவிடவும் மனம் செல்லவில்லை. ஒரே கவலையில் மூழ்கினான். போன தடவை

தான் குழந்தையும்போய் அவளும் செத்துப் பிழைத்தாள். இவ்வளவு நாளாக அவன் அவளைப்பற்றி அவ்வளவாகக் கவலைப் படவில்லை; அறியாதவன்தானே. குழந்தை பிழைக்க வேண்டுமே என்ற கவலைதான் அவனை இரவுபகலாக வாட்டிக்கொண்டிருந்தது. ஆனால்... ஆனால்... இன்று... வெங்குட்டுவின் முதல் மனைவிக்கு ஆன கதியைக் கேட்டவுடன் அவனுடைய உள்ளம் பகீர் என்றது. தன் அருமை விமலாவுக்கும் அதே கதி நேர்ந்தால்? ஐயோ... நினைத்தாலே உள்ளம் நடுங்குகிறதே, கண்மணி விமலா தன்னை ஏமாற்றிவிடுவாளோ? ஐயோ... அவள் இல்லாமல் வாழ்வதும் ஒரு வாழ்வா?...சரி, அப்புறம் அப்பா, அம்மா, அத்தை எல்லாம் தன்னை பிடுங்கித்தின்று, வேறொருத்திக்கு மாலையிடச் செய் வார்கள். ஐயோ. கண்மணி விமலாவுக்கு நான் ஒருநாளும் த்ரோகம் செய்ய மாட்டேன். சிவ சிவா, என்ன பாழும் சமூகம். எப்பொழுதும் மனித ஜன்மம் மற்றவர்களின் கட்டுப்பாடில் உழன்று சாக வேண்டியதுதான்... ..பெரியவாளாம், பெரியவாள்...பெரியவா ளுக்கு மரியாதை வைக்க வேண்டுமாம். அவர்கள்தான் ஒரு பெண்ணைக் காட்டி மாலை போடச்சொல்லி, "இந்தா உன் மனைவி" என்பதும்... அவள்மேல் உயிரையே வைத்து அன்பு செலுத்தும் பொழுது யமன் நமக்கு வஞ்சனை செய்துவிட்டாலோ?...சிறு குழந் தைக்கு ஒரு விளையாட்டுச் சாமான் பாழாகப் போய்விட்டால் அதற்குப் பதிலாக மற்றொன்றைக் கொடுத்து ஏமாற்றி சமாதானம் செய்வதுபோல்தான், இன்னொருத்தியைக் கொணர்ந்து கழுத்தில் கட்டிவிடுவது. நல்ல விளையாட்டாக இருக்கே இந்த உலகம். புனிதக்காதல், தெய்வீகக்காதல், விலையில்லா பொக்கிஷம் என்றெல்லாம் போற்றக்கூடிய காதலைத் தெருவில் விற்கும் பட்டாணிக் கடலைபோலும், குழந்தையின் விளையாட்டுச் சாமான் போலவும் எண்ணுகிறார்களே!!...வெங்குட்டுதான் ஆச்சு, பச்சைக் குழந்தையா என்ன? B. A, B. L.-லாம், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பாம்! கடைசியில் மனைவியின் விஷயத்தில் அவன் யோக்யதை இவ் வளவுதான்! 'என் ராஜம்! My love!'... என்றெல்லாம் பெருமை யடித்துக்கொள்வானே! அந்தப் புனித ஆத்மாவை அதற்குள் மறந்துவிட்டு, மற்றொருவளுக்கு மாலையிடுகிறானே! என்ன ஜன்மம்!" என்றெல்லாம் சிந்தித்தான் ராஜா.

அதே சமயம் வாசலில் தந்தி சேவகன் வந்து கூப்பிடவே, ராஜு மனம்பதறி ஓடிப்போய் அவனிடமிருந்து தந்தியை வாங்கிப் படித்தான். அவன் மனைவி விமலா அன்று விடியற்காலையில் 5 மணிக்கு ஆண் குழந்தையைப் பிரசவித்தாளென்றும், குழந்தை சுகமென்றும், தாயாருக்கு உடம்பு ரொம்ப சரியில்லையென்றும் தெரியப்படுத்தி இருந்தது.

பகவானே, என் விமலுவைக் காப்பாற்றிக் கொடுப்பாய் என்று வாய்விட்டுக் குமுறியவனாய் வந்து, நாற்காலியில் தொப் என்று சாய்ந்தான்.

அன்று இரவு ரயிலிலேயே ராஜகோபாலனும், அத்தை காமாக்ஷியம்மாளும் பெங்களூருக்குப் பயணமானார்கள். மறுநாள் காலை ரயில் தொடரிலிருந்து இறங்கினவர்கள் நேராக பிரஸவ

ஆஸ்பத்திரிக்கே கிளம்பிச் சென்றார்கள். ஆமாம், போன தடவை யும் இப்படித்தான் போனார்கள். ஆனால் இவ்விதம் கவலை தோய்ந்த உள்ளத்துடன் செல்லவில்லை. குதூஹலத்துடன் கொம்மாளம் போட்டுக்கொண்டு போனார்கள். "......உனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. தத்ரூபம் உன்னைப்போலவே இருக்கு. விமலா சுகம். உடனே புறப்பட்டு வந்து உன் செல்வத்தைப் பார்க்கச் சொல்கிறாள் உன் விமலா......" என்று அவன் மாமனார் கடிதம்தான் எழுதியிருந்தார். குஞ்சு மைத்துனர், மைத்துனி மார்களுக்கு நிறைய கற்கண்டும், சாக்லேட், பிஸ்கட் வகைகளும் வாங்கிக்கொண்டு பலே குஷியுடன் வந்தான்ராஜு. பாவம்! குழந்தையை ஆர்வத்துடன் பிரேமை பொங்கப் பார்த்தான். குழந்தை மூக்கும் விழியுமாக தங்க விக்ரஹம்போல் இருந்தான். சந்தோஷமும், பெருமையும் தாங்கவில்லை அவனுக்கு.

"பத்து நாளும் இங்கேயே இருந்துவிட்டு பதினோரும் நாள் புண்ணியாகவசனத்தையும் முடித்துக்கொண்டு ஊருக்குப் போக லாம்" என்று சொல்லி, ராஜுவின் மாமனார் அவனை பெங்களூரி லேயே நிறுத்திக்கொண்டார். ஆனால்... ஆனால்... அவனுடைய குழந்தை ஆறும் நாளே பெற்றவர்களை ஏமாற்றிவிட்டு உயிர் நீத்தது.

வழி நெடுக இந்தச் சம்பவம் முழுவதும் நினைவுக்கு வரவே, ராஜுவின் உள்ளம் வேதனையால் துவண்டது.

ஆஸ்பத்திரிக்குப் போனவன் குழந்தையை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. விமலாவின் உடல்நிலை மோசமாக இருந்தது. இரவும் பகலும் கணக்கற்ற இன்ஜக்ஷன்களால் அவளுடைய உடல் துளைக்கப்பட்டது. நினைவிழந்து கட்டிலில் கிடந்தாள். ராஜு வந்து நாலுநாள் ஆகியும், விமலாவுக்கு அவன் வந்திருப் பதும் தெரியாது.

இந்த நிலையில், ராஜுவுக்கு ஒரு வாரம் ஒரு யுகமாகக் கழிந் தது. குழந்தையைத்தாயார் அறையிலிருந்தும் பிரித்து வேறொரு அறையில் விட்டிருந்தார்கள். ராஜு குழந்தையை ஒருதடவை யாவது பார்க்கப் போகாமலிருப்பதைக்கண்டு அவன் மாமியார், மாமனார் உள்பட, எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள், அந்த இளஞ்சிசுவின்மேல் தன் பாபக்கண்கள் படிய வேண்டாம் என்ற அஞ்ஞானம் அவனுக்கு. குழந்தை எப்படியாவது ஆயுசுடன் இருக்கட்டும் என்ற எண்ணம் ஒன்றுதான், அவனுக்கு. ∴

டாக்டர்களின் இடைவிடாத சிகித்ஸைகளுக்கும் மீறி விமலா இவ்வுலகிலிருந்து விடைபெறவிருந்தாள். ஆனால் ராஜுவின் பிரார்த்தனைகள் பலித்தன. கடவுள் மனமிரங்கினார். விமலா பிழைத்தாள். அன்று அவளுக்கு, பதினைந்து நாட்களுக்குப்பிறகு தான் நினைவு வந்த நன்னாள். நினைவு வந்தவுடன் அவள் கேட்ட முதல் கேள்வி, அவளுடைய கணவனைப்பற்றித்தான். ராஜு

# காவிதாசர் கனவு

## 8. உமாப்ரஸாதம்—குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

பிறகு சப்தரிஷிகள் பரமேச்வரனை நோக்கி, "பரமேச்வரரே! இன்றைய தினம்தான் எங்களுடைய வேதாத்யயனமும், வேள்வியும், தவமும் உண்மையான உயர்ந்த பயனை அடைந்தன. ஏனென்றால் உலகங்களுக்கெல்லாம் ஈச்வரனான நீர் எங்களையும் பொருட்படுத்தி நினைத்தீர். எவனுடைய மனதில் நீங்கள் விளங்குகின்றீர்களோ அவன்தான் பெரிய புண்ணியவான். சூர்யசந்திரர்களுடைய ஸ்தானத்திற்கு மேலாக எங்களுடைய ஸ்தானம் இருந்தாலும் இப்பொழுது எங்களை நீங்கள் நினைத்ததால் அந்த நினைவே அதைவிட மிக உயர்ந்த ஸ்தானம். எவன் உங்கள் மனதில் இருக்கின்றானோ அவனுடைய புண்ணியத்தை உரைக்க முடியுமா? எல்லோருடைய மனத்திலும் விளங்கும் பரமாத்மாவான உங்களுக்கு எங்களுடைய பக்தியை அறிவிக்க வேண்டுமா? நாங்கள் உங்களை நேராகக் கண்டாலும் உங்களுடைய உண்மையான தத்துவத்தை நீங்களே தான் கூறவேண்டும். உங்களுடைய தத்துவம் மனதிற்கு எட்டாதது. எங்களுக்கு நீங்கள் இடும் கட்டளையை அறிவிக்கக் கோருகின்றோம்" என்று கூறினார்கள்.

பரமேச்வரன் கிருபை கூர்ந்து "நான் அஷ்டமூர்த்தமாக இருந்து உலகத்தைக்காப்பதற்காகவே எண்ணங்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது தேவர்கள் என்னிடமிருந்து

---

பகவானை நன்றியுடன் துதித்தவண்ணம் காதலியின் அருகில் வந்து...... அமர்ந்தான்.

"குழந்தை?" என்றாள் விமலா (ஈனசுவரத்தில்) "அவனை நான் இன்னும் பார்க்கவில்லை."

"ஏன்?"

"என் பாபக்கண் அந்தப் புனித ஆத்மாவைப் பார்க்கலாகாது விமலு. அவன் ஆயுசுடன் நன்றாக இருக்க வேண்டும்......

இதென்ன பேச்சு? அவன் உங்களுடைய பிரஸாதம். உங்கள் வம்சக்கொழுந்து. இந்த அஞ்ஞானமெல்லாம் எதற்கு?" அவளால் அதற்குமேல் தொடர்ந்து பேச முடியவில்லை.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு தாயாரின் அருகில் கிடத்தப்பட்ட அருமை மைந்தனபுறம் திரும்பி ஆர்வத்துடன் பார்த்தான் ராஜு. ஆசையுடன் எடுத்தணைத்து முத்தமிட்டான், அவன் கவலை தீர்ந்து, அவன் உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்து தளும்பிற்று.

குமரக்கடவுளை அசுரர்கள்மேல் வெற்றி பெறுவதற்காக விரும்புகின்றார்கள். ஆகையால் நீங்கள் இமயம் சென்று ஹிமவானிடம் பார்வதியை எனக்கு மணஞ்செய்து கொடுக்கும்படி முயற்சி செய்ய வேண்டும். இந்தக் காரியத்தில் அருந்ததி பெரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். இதைப் பெண்மக்களே நன்கு செய்ய முடியும்" என்று கூறினர்.

அம்முனிவர்கள் அவரிடம் விடை பெற்று உடனே வான வழியாகச் சென்று ஹிமவானிருக்குமிடத்தை நாடி வந்தார்கள். அவர்களுடைய வருகை அசையும் நீரில் தோன்றும் சூர்யப்பிரதிபிம்பங்களுடைய தொகுதிபோலிருந்தது.

**தோயாந்தர் பாஸ்காராலீவ**
**ரேஜே முனிபரம்பரா** |

அவர்களை எதிர்கொண்டழைத்து மரியாதை செய்து அர்க்கியமளித்து ஹிமவான் நல்வரவு கூறினர்.

"முகிலில்லாமலே மழை பொழிந்ததுபோலும், மலருண்டாகாமலே கனியுண்டாவதுபோலும் நான் எதிர்பாராமலே உங்களுடைய நல்வரவு நேர்ந்தது. அறிவீனனுக்கு அறிவு வந்தால், இரும்பு தங்கமாக மாறினல், பூமியிலிருந்துச் சுவர்க்கம் சென்றால் என்ன ஆனந்தம் உண்டாகுமோ அந்த ஆனந்தத்தை நான் உங்களைக் கண்டு அடைந்தேன். இன்றுமுதல்தான் உங்களுடைய பொன்னடி சூட்டியதால் என் நாடு தூய்மையடைந்தது. கங்கையின் நீராலும், உங்களுடைய பொன்னடியைக் கழுவிய நீராலும் நான் புனிதன் ஆனேன். உள்ளிருளை அகற்றும் புண்ணிய மூர்த்திகளே! ஆசைகளையெல்லாம் கடந்த உங்களுக்கு என்ன விருப்பம், இப்பொழுது வந்தது" என்று வினவினர்.

**மூடம் புத்தமி வர்த்மானம்**
**ஹைமீபூதமிவாயஸம்** |
**பூமேர்திவமாரூடம்**
**மன்யே பலதனுக்ரஹாத்** ||
**அவைமி பூதமாத்மானம்**
**த்வயேனைவ த்விஜோத்தமா:** |
**மூர்த்னி கங்கா ப்ரபாதேன**
**தௌதபாதாம்ப ஸாசவ:** ||

(தொடரும்)

---

ஜகன்மோகினி
வருடச் சந்தா ரூ. 3
தனிப் பிரதி அணு 4.

# வாழ்க்கை தீபம்

வை. மு. கோ.

ஸௌபாக்யவதி லக்ஷ்மிக்கு! உபயகுசலம்.

என் கடிதத்தைப்பற்றி ப்ரமாதமாய்ப் புகழ்ந்து எழுதியிருக்கிறாய் தவிர, உன் மாமியார், மாமனாரும் அபாரமாய்ப் புகழ்ந்ததாக எழுதியிருக்கிறாய். மிக்க சந்தோஷம். உன் நாத்தனார் தன் 10 வயது பெண்ணுக்குப் போலீஸ்காரன் வேஷத்தையே போட்டு கையில் ஸ்டாப் சக்ராயுத கட்டை அட்டையில் செய்துகொடுத்து பீட் கான்ஸ்டேபில் நாட்டியம் ஆடச்செய்து வேடிக்கைப் பார்த்ததாயும் எல்லோரும் கொல்லென்று சிரித்ததால் அந்தக் குழந்தைக்கே வெட்கமாகி விட்டதால் இனி இம்மாதிரி ஆடமாட்டேன் என்று அழுது மறுத்துவிட்டது என்றும் எழுதியிருக்த பாகத்தை நான் திரும்பத் திரும்பப் படித்துப் பூரித்தேன். சின்னஞ்சிறிய பத்து வயதுக் குழந்தைக்கு இயற்கையாக உள்ள நாணம், அதிலும் தன் வீட்டிற்குள் ஆடும்போதே உண்டாகும் வெட்கங்கூட இல்லாமல் ப்ரமாதமாய்ப் படித்துவிட்டு வயதுவந்த கன்னிகைகளுக்குஏற்படாமல் பஸ்தொழிலிலும், போலீஸ் தொழிலிலும், தெருத்தெருவாய்த் திரிந்து வீதியை அளவிட்டு ரோடு ரிப்பேர் செய்யும் ஓவர்ஸியர் முதலிய தொழிலிலும் சேர்ந்துவிடத் துணிந்துவிட்டதானது நம் நாட்டின் துர்பாக்யம் என்று சொல்வதா! மிக மேன்மையான பெண்மையின் பண்பாடு மரத்துப்போய் செத்துவிட்டதென்று சொல்வதா! என்றுதான் தெரியவில்லை.

லக்ஷ்மீ! என்னை வாதக்ஷணை விரோதி பயித்தியம் என்று சொல்லிக்கொண்டிருந்ததோடு இனி இந்த விஷயத்தையும் சேர்த்துக்கொண்டுப் பரிகஸிப்பாய் அல்லவா? யார் எதைவேண்டுமானாலும் பரிகஸிக்கட்டும். எனக்கு அதைப்பற்றி கவலையே இல்லை என் அந்தராத்மாவில் குடிகொண்டுள்ள கீதாசாரியன் திருவடித் துணைகொண்டு அவனிடும் கட்டளையை நிறைவேற்ற நான் தயங்கப்போவதில்லை. பெண்கள் பஸ் கண்டக்டர்களாகலாம் என்பதை சில நாளைக்கு முன்பு ப்ரமாதப்படுத்தி ஊர் சிரிக்கும்படியான நிலையில் அந்த வெள்ளம் ஓய்ந்துவிட்டது என்று நினைப்பதற்குள் புதிய வெள்ளம் கிளம்புவது, பயங்கரத்தைத்தான் உண்டாக்குகிறது.

லக்ஷ்மீ! நான் ஏதோ பயித்தியக்காரத்தனமாய் இந்த உத்யோக விஷயத்தைக் கண்டித்து எழுதிவிடுவதாக நினைக்

காதே. முக்யமான படித்த முதிர்ந்த அறிவாளிகளையும் உத்தியோகத்திலேயே இருக்கும் சில பெண்மணிகளையும் நான் நேருக்கு நேராகக் கலந்து பேசியபிறகுதான் பின்னும் தைரியமாக எழுதுகிறேன் தெரிந்ததா?

இதைத் தவிர இன்னும் எத்தனையோவித பயங்கரங்களைக் காணும்போது என்ன துர்பாக்யத்தின் விளைவோ இத்தகைய விபரீதங்களை வேண்டுமென்று சிலர் கத்துகிறார்களே என்று மனம் தவிக்கிறது.

❋ ❋ ❋

லக்ஷ்மீ! இந்த உலகத்தில், அதிலும் வரதக்ஷிணைப் பிசாசு பிடித்து ஆடும் இக்காலத்தில் இத்தகைய அதிசயத்தைப் பார்க்கும்போது எனக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவிட்டே சொல்லமுடியாது அத்தகைய விஷயம் என்னவென்று நினைக்கிறாய், சென்றவாரம் ஒரு அதிசயமான கடிதத்தை எனக்குத் தெரிந்த ஒருவர்கொண்டு என்னிடம் காட்டினார். அந்தக் கடிதந்தான் என்னை ஆனந்தத்திலாழ்த்தியது. அதாவது நல்ல உயர்ந்த குலத்தில் பிறந்து சிறந்த படிப்பு படித்து வடக்கே நல்ல உத்யோகத்திலிருக்கும் ஒரு வாலிபனுக்கு அவனுடைய பெற்றோர்கள் கல்யாணத்திற்காக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பையனின் தங்கைக்குக் கல்யாணமாகாமல் தான் செய்துகொள்ளமாட்டேன் என்று சொல்லி இதுகாறும் தட்டிவந்தான். கடவுள் கிருபையில் தங்கைக்கு நல்ல இடத்தில் கல்யாணம் இந்த வருஷம் நடந்துவிட்டது.

பெற்றோர்கள் பையனுக்குக் கல்யாண ஏற்பாடு செய்தார்கள். பையன் தனது மூத்த சகோதரியின் கணவனுக்கு ஒரு அத்புதமான கடிதம் எழுதியிருந்தானாம். அதன் ஸாரமானது கடல் கடைந்த அமுதத்தைவிட அதிஅதி மதுரமாக இருந்தது. அதாவது தான் இனி கல்யாணம் செய்துகொள்ளத் தடையில்லை. ஆனால் என் விருப்பப்படி செய்தால் உடனே நடத்தலாம். பெண் வீட்டாரிடம் காலணா வரதக்ஷிணை வாங்கக்கூடாது. சீர்வகைகள், நகைகள் என்ன செய்வீர்கள் என்று கேட்கக்கூடாது. ஆடம்பரமும் அட்டகாஸமும் வீண் செலவும் செய்யக்கூடாது. பெண்ணுக்கு சம்பிரதாயமாய் பிள்ளைவீட்டில் வாங்கக்கூடிய சேலைகளை அதிக ஆடம்பரமின்றி நாமே வாங்கியும் கொடி திருமங்கல்யம் நாமே செய்தும் போட வேண்டும். தேனீர் விருந்தும், கச்சேரியும் எனக்குப் பிடிக்கவில்லை. இந்த விஷயங்களில் செலவாகும் வீண் செலவுகளைக் குறைத்து முக்யமான செலவுகளை சிறக்கச் செய்யவேண்டும். கடவுள் க்ருபையினால் எனக்கு நல்ல சம்பளம் கிடைக்கும்போதும் நீங்கள் அதைக்கொண்டு த்ருப்தியடையாமல் பெண் வீட்டாரிடம் கை நீட்டக்கூடாது.

நாம் நம் பெண்ணை வைத்துக்கொண்டு பட்டபாட்டை நினைத்துப் பார்க்கவேணும். அப்படித்தானே இன்னொருவரும் என்று நினைத்து இந்த அல்பமானகொடிய பழக்கத்தை அடியோடு வெறுக்கவேண்டும். இதற்கெல்லாம் சம்மதித்துக் கடிதமெழுதினுல் நான் கல்யாணம் செய்துகொள்ளத் தயார். என்று இன்னும் ஏதேதோ அருமையான விஷயங்களைஎழுதியிருக்கிருன். உண்மையில் இதைப் படிக்கும்போது என்னைப் போன்ற மனப்பான்மை உடையவர்களுக்கு எத்தனை சந்தோஷம் உண்டாகும் என்று நீயே சிந்தித்துப் பாரு.

லக்ஷ்மீ! இன்னொரு அதிசயத்தைக் கேளு. இதேபோல் இந்த ஊரிலேயே இன்னொரு உயர்ந்த குடும்பத்துப் பிள்ளையாண்டான். படித்து உத்தியோகத்திலிருக்கிருன். பையன் கண்ணுக்கு லக்ஷணமாக இருக்கிருன். அவனும் தன் பெற்ருேரிடம் காலணு வரதக்ஷிணை வாங்காமல் விவாகத்தைச் செய்வதானுல் சம்மதிக்கிறேன் என்று தைரியமாகக் கூறுகிருன். இத்தகைய தூய எண்ணங்களும் பிடிவாதமான குணமும் மற்ற பிள்ளைகளுக்கும் உண்டாகுமாயின் வரதக்ஷிணையினுல் உண்டாகும் பலவித கொடுமைகளும் பரிதாபங்களும் சிறுகச் சிறுக மறைந்து பழைய சுபிக்ஷமும் ஒற்றுமையும் உண்டாகிவிடுமல்லவா! இதை நினைக்கும்போது எத்தனை ஆநந்தமாக இருக்கிறது தெரியுமா!

லக்ஷ்மீ! இன்னொரு விசித்திரமான சம்பவம் நடந்தது. இதை நம்பவே முடியவில்லை. அதாவது பிள்ளையைப்பெற்ற மகாபுண்யசாலிகளாகிய பாக்யவான்கள் வரதக்ஷிணை வாங்கிய விஷயமே கல்யாணப்பிள்ளைக்குத் தெரியாதாம். அவன் கல்யாணமாகிய பிறகு தன் சிநேகிதனுடன் பேசுகையில், "நான் காலணு பிச்சைக் காசு வரதக்ஷிணை வாங்காமல் விவாகத்தைச் செய்துகொண்டேன். என் தங்கைக்குக் கல்யாணம் செய்யும்போதும் காலணு கொடுக்கமாட்டேன். இந்தக் கொள்கையைத்தான் பரப்பவேண்டும்". என்று ஜம்பமாகப் பேசினுனும். அந்த சிநேகிதன் பெரிதாகச் சிரித்துவிட்டு, "போடா ஜம்பக்கட்டை. முழு வட்டிக்கு எங்கப்பாவிடம்தான் உன் மாமனுர் சுளைசுளையாகப் பணம் கடன் வாங்கி மூவாயிரம் ரூபாய் உன்பெற்ருேரிடம் கொடுத்தது எனக்குத் தெரியாது என்று பார்க்கிருயா!" என்று சொல்லியபோது உண்மையில் விஷயமறியாத அந்தப் பிள்ளையாண்டான்மனம்புழுங்கினுனும். வீட்டிற்கு ஓடி தன் பெற்ருேரிடம் இது விஷயம் உண்மையா என்று சண்டையிட்டானும். உண்மைதான். அந்த பணத்தைக் கொண்டுதானே உன் தங்கையின் கல்யாணத்தை நடத்த வேண்டும். அதனுல் வாங்கினேம். இந்த விஷயமெல்லாம் உனக்கெதற்கடா! என்று வெகு சமத்காரமாகப் பேசினுர்களாம்.

பையன் அதோடுவிடாமல் மாமனாரிடம் ஓடினானாம், நான் வரதக்ஷிணையே வாங்கக்கூடாதென்று சொல்லியும் எனக்குத் தெரியாமல் என் பெற்றோர்கள்—ஏன் என் தாயாரே—இந்த அசட்டுக் காரியத்தைச் செய்துவிட்டதற்கு வருந்துகிறேன். என் சம்பளத்திலிருந்து நான் இந்தக் கடனுக்கு மாதாமாதம் சீட்டுக் கட்டி அடைத்துவிடுகிறேன்... அல்லது என் மனைவிக்குப் போட்டுள்ள வைரக்கம்மலை விற்றுக் கடனை முதலில் தீர்த்துவிடுங்கள் என்றானாம்.

இம்மாதிரி மிகமிகப் போற்றிவாழ்த்தக்கூடிய பிள்ளைகள் கூட இக்காலத்திலிருப்பதைப் பார்க்க உள்ளமும் உடலும் பூரித்துப் புலகிதமடைகிறதல்லவா! இதுபோல் நூற்றுக்கு ஒருவர் கிடைத்தால்கூட போதும். பிள்ளையின் கல்யாணத்தில் வரதக்ஷிணை என்கிற பிச்சை வாங்கித் தன் மகள் கல்யாணத்தை நடத்துவது என்பது வெட்கி வெறுக்கக் கூடிய செய்கையே யன்றி வரவேற்கத்தக்கதல்லவே.

இதுபோன்ற விஷயங்கள் உனக்கு எப்படி கிடைக்கிறது என்று நீ யோசிக்கலாம். அதற்கும் நானே பதில் சொல்லி விடுகிறேன். நான் எந்தக் கூட்டத்திற்கோ, கோயிலுக்கோ, கல்யாண வீடுகளுக்கோ எங்கு சென்றாலும் சரி எங்கள் வீட்டிற்கு யார்வந்தாலும் சரி இந்த விஷயமானப் பேச்சுக்களைத் தான் பேசி விஷயங்களைச் சேகரித்துக்கொள்கிறேன். சென்ற மாதம் ஒரு சினிமாவுக்கு நான் சென்றிருந்தபோது அங்கு முன்பின் தெரியாத ஒரு அம்மாள் தன்னந்தனியாக வந்தார்கள். தெய்வச் செயலாய் என் பக்கத்திலமர்ந்தார்கள். பேச்சுத் துடங்கியது. என்னை இன்னாரென்று தெரிந்து கொண்டு அந்தம்மாள் மிக்க சந்தோஷத்துடன், "நான் பெங்களூரு வாஸி. சமீபத்தில் அங்கு நடந்த ஒரு கல்யாணத்தைச் சொல்கிறேன். நீங்கள் ஆநந்தப்படுவீர்கள். வரதக்ஷிணை என்றால் நீங்கள் எதிர்ப்பவர்களாயிற்றே என்று நான் வலுவில் சொல்கிறேன். என்று மேல் குறித்த ஒரு விஷயத்தை மட்டும் அந்தம்மாள் சொன்னார்கள்; ஒன்றேகால் ரூபாய் செலவில் சினிமா பார்க்கும்போது சில சமயம் மனது சமாதானமே அடையாது தவிக்கும். அன்று அந்த சினிமாவும் மனத்திற்கு திருப்தியாயிருந்தது. அந்தம்மாளால் கிடைத்த விஷயமும் வெகு வெகு உத்ஸாகமாயமைந்ததால் இதை உடனே உனக்கு எழுதுகிறேன். இதுபோன்ற விஷயங்கள் ஏதாவது உனக்குத் தெரிந்தால் அதை தயவுசெய்து எனக்கு எழுது. தீபாவளி கார்த்திகைப் பண்டிகைகள் சிறப்பாக நடந்தன.

— மாமி

# ‘ப்ரதிபிம்பம்’

**வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்.**

[தொடர் கதை]

3

மங்களத்தின் குரலை கேட்ட மாதவி பதில் கொடுக்கமாட்டாது தவியாய்த் தவித்தாள். பெருகிவந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சரசர என்று கீழே இறங்கி வந்தாள். சிரமத்துடன் தன் துக்கத்தை மறைத்துக்கொண்டு என்னம்மா........ எதற்கு கூப்பிட்டீர்கள் என்று கேட்டாள்.

மாதவி! தையல்காரன் வந்து இருக்கிறான். இந்த 4 வெல்வெட் சொக்காய்களைத் தைக்கக் கொடுக்க வேண்டும். சரியான அளவு சொக்காய் கொண்டு வா என்றாள்.

வெல்வெட் துணிகளைக் கண்ட மாதவியின் கண்களில் முள் குத்துவதுபோல் இருந்தது. “வெளிப்பகட்டு, டம்பம், இது போடாவிட்டால் காரியம் நடக்காதோ” என்று தன் கணவன் சொன்ன சொற்கள் நெஞ்சை அள்ளியது. அம்மா இது எனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட நா எழுந்தது. அடுத்த க்ஷணம் அப்படி சொன்னால் மரமியின் மனம் என்ன கஷ்டப்படும்! மூஞ்சியில் அடித்தாற்போல எப்படி சொல்வது. ஏற்கெனவே தான் உயிருடன் இருந்து குழந்தை பிறந்து பார்க்கப் போகிறாரா என்று ஏக்கமாய் இருக்கிறாரே, நான் இறந்தாலும் இந்தமொக்கு தைக்கும் கல்யாணத்தையாவது சிறப்பாய் செய்து பார்த்து விடுகிறேன். என்று மனம் உருகி சொன்னாரே. இவர் ஆசையைப் பூர்த்தி செய்வதா? அல்லது எனக்கு இந்த மொக்கு தைக்கும் கல்யாணம் செய்துக்கொள்வது இஷ்டமில்லை என்று சொன்ன அவர் மனதை த்ருப்தி செய்வதா என்று ஒன்றும் புரியாது தவித்தாள்.

குழப்பத்துடனே அளவு ரவிக்கையைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்று விட்டாள், அன்று பூராவும் மனம் தாமரையிலைத் தண்ணீரைப்போல் தத்தளித்துக் கொண்டே இருந்தது. எவ்வளவு முயன்றாலும் அவள் மனம் சமாதானமடைய மறுத்தது. இடையிடையே “வேர் வாடினால் இலை தானாக வாடிவிடும்” நீ சந்தோஷமாய் இருந்தால் தான் சர்ப்பத்தில் இருக்கும் குழந்தை அழகாய்ப் பிறக்கும் எனற மாமியாரின் அன்புமொழிகள் பயத்தை ஊட்டியது. அன்று பூராவும் படுக்கையும் கொள்ளாது, சாப்பிடவும் பிடிக்காது தத்தளித்தாள்.

தன் கலவரத்தை எங்கு மாமியார் கண்டு கடிந்துகொள்வரோ என்று பயம் வேறு வாட்டியது. ஏற்கெனவே பலஹீனப் பட்டு இருந்த அவள் உடல் கடக்கவும் சிவனற்ற கொடியைப் போல துவண்டு கிடந்தது. அவள் மனம் மட்டும், அன்று எப்படியாவது ரத்னசாமியைச் சந்தித்து அவன் மனதில் உள்ளதை அறிந்தே தீரவேண்டும் என்று [illegible] கோட்டை கட்டிக் கொண்டு இருந்தது.

183197

டக்...டக் என்ற பூட்ஸ் சப்தத்தைக் கேட்ட மாதவி அலறிய வாறு எழுந்தாள். வழக்கத்திற்கு விரோதமாய் ரத்னசாமி அவள் அருகில்நின்றவாறு அவளையே உற்றுப்பார்த்தவாறு இருந்தான். இதைக்கண்ட மாதவியின் மனம் படபட என்று அடித்துக் கொள்ளத்துடங்கிறது. கால்கைகள் நடுங்கியவாறு சட்டென்று எழுந்து நின்றாள். பேச தைரியம் இன்றி, கண்கள் நீரைத் தேக்கியது.

இதைக் கவனித்த ரத்னசாமி, "ஏன் மாதவி, என்னைக் கண்டு இப்படிப் பயப்படுகிறாய்? நான் என்ன மிருகமா? மனிதன் தானே? ஆனால் என்னால்..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன் சட்டென்று பேச்சை நிறுத்திக்கொண்டு, "ஐயோ! ப்ரயாணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நேரமாய் விட்டது!" என்று சொல்லியவாறு அறையைவிட்டு மறைந்தான்.

ஏற்கெனவே இருந்த குழப்பம் அடங்கும்முன் ரத்னசாமியின் இந்தத்திடும் செய்கை மாதவிக்கு ஒரே ப்ரமிப்பை ஊட்டியது. மாதவி எவ்வளவோ சிரமத்துடன் தைரியம் செய்துகொண்டு பேச வாயெடுத்த சமயம் எதிர்பாராத விதமாய் ரத்னசாமி அறையைவிட்டு வெளியேறியது 'ஷாக்' அடித்ததைப்போல் அதிர்ச்சியை ஊட்டியது. செய்வதறியாது ப்ரமை பிடித்து சிலையாய் நின்றாள். புயலில் அகப்பட்ட துரும்பைப்போல் அவள் உள்ளம் தத்தளித்துக்கொண்டு இருந்தது.

கணவனைகண்ட உடன் பேய் அறைந்ததுபோல் தான் இப்படி நடுங்கியது ஒருவேளை அவனுக்குக் கோபம்வந்து இருக்குமோ! அன்பாய்தான் பேசவேண்டும் என்று வந்த சமயம்தான் அசம்பாவிதமாய் நடந்துகொண்டதால் தான் சொல்லவந்த விஷயத்தையும் சொல்ல வாயெடுத்தும் தடுத்துக்கொண்டுபோய் விட்டாரா என்ற புது எண்ணம் தோன்றி பின்னும் திகிலடையச் செய்தது. இவ்வளவு நாளாய் நான் தனியாய் சந்தித்து கேட்க வேண்டும் என்று எண்ணி இருந்த கோட்டையெல்லாம் நானே சமயம் வாய்த்தும் பாழாக்கிக்கொண்டேனே.

ஏன் இப்படி ஒரு நடுக்கம். சீ...மதியீனம். எவ்வளவு நாள் தான் இப்படி இருக்கமுடியும்? கடுகடுப்பு இல்லாது தானே சொல்லவந்த விஷயத்தை எப்படியும் கேட்டு அறிந்துகொள்ளத் தானவேண்டும். முதலில் இந்த பயத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று பலவிதமாய் எண்ணமிட்டு தைர்யப்படுத்திக் கொண்டாள். தன்னால் இயன்றவரை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு புறப்பட்டாலும் உள்ளூற நடுக்கம் விட்டபாடு இல்லை.

ரத்னசாமி துணிமணிகளை எடுத்துவைத்து ஹோல்டாலைக் கட்டிக்கொண்டு இருந்தான். மாதவி அடிமேல் அடிவைத்து நிதானமாய் ரத்னசாமியை அணுகினாள்.

பூனைபோல் பதுங்கிவரும் மாதவியைக்கண்ட ரத்னசாமி தன் வழக்கமான குரலில் "என்ன விஷயம்?" என்று வெடுக்கென்று கேட்டான்.

தன் கணவர் சாந்தமடைந்துவிட்டதாக எண்ணிவந்த மாதவிக்கு பழைய கடுகடுப்புக் குரலைக் கேட்டு தூக்கிப்போட்டது.

பழையபடி உடல் நடுங்கத் தொடங்கியது. இருந்தாலும் தன் பயத்தைத் தணித்துக்கொண்டு, "எத்தனை நாளைக்கு எனக்கு இந்தத் தண்டனை?" என்று கேட்க வாயெடுக்கும்முன் ரத்னசாமி பதில் எதிர்பார்க்காதவன்போல் மெத்தையைவிட்டே இறங்கிச் சென்றுவிட்டான்.

தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டதைக் கண்ட மாதவியின் உள்ளம் புழுவாய்த் துடித்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. அதை ப்ரகடனம் செய்வதைப்போல் கண்கள் ப்ரவாகத்தைப் பெருக்கியது. தள்ளாடியவாறு வராண்டாவை அடைந்த மாதவியை ரத்னசாமியின் குரல் காந்தத்தைப்போல் இழுத்தது. படி அருகில் வந்து சம்பாஷணையைக் கவனித்தாள்.

மங்களம் தணிந்த குரலில், 'ஏனப்பா ரத்னம்! இவ்வளவு அழகாய்ச் செய்யப்போகும் கல்யாணத்திற்கு நீ இல்லாமல் எப்படி த்ருப்தி அளிக்கும்? இந்த ஊர் ப்ரயாணத்தை மாற்றி அடுத்த வாரம் போகக்கூடாதா? என்றாள்.

"என்ன! ப்ரயாணத்தை மாற்றுவதா? அர்த்தமற்ற இந்த அழகான கல்யாணத்தை நீங்களே கண்டு களியுங்கள். ஒரு வாரம் நான் இருக்க மாட்டேன். நிர்ப்பயமாய்ப் பணத்தை வாரி இறைத்துக் கொண்டாடுங்கள்! நான் வருகிறேன்! என்று வெளியேறினான்.

மங்களம் மூஞ்சியைத் தொங்கவிட்டவாறு பதில் சொல்ல வாயின்றி வாளா இருந்தாள். இந்த அதீத செய்கையைக்கண்டு மனம் கசிந்த மங்களம், அதுமட்டும் மருமகள் இந்தச் சம்பாஷணையைக் கேட்கவில்லையே! தேவலை! என்ற த்ருப்தியோடு உள்ளே சென்றாள். இதைக் கேட்டு மனம் துடிக்கும் மாதவியின் நிலையை அவள் எங்ஙனம் அறிவாள்.

மொக்கு தைக்கும் கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்பிருந்தே வீட்டில் விருந்தாளிகள் வரத்தொடங்கிவிட்டார்கள். வீடு பூராவும் குழந்தைகளும், பெரியவர்களுமாய் நிறைந்துவிட்டார்கள். மங்களம் பச்சைக் குழந்தையைப்போல் ஓடி ஓடி எல்லோரையும் விசாரித்து மகிழ்ந்துகொண்டு இருந்தாள். மாதவி எல்லோருடனும் என்னதான் கலவரத்தைவிட்டுப் பழகினாலும் முகத்தில் படிந்த சோகக்களை மாறவே மறுத்தது. வந்த அவ்வளவு பேர்களும் 'ஏன் மாதவி ஏதோமாதிரி காண்கிறாளே? என்ன உடம்புக்கு?' என்று மங்களத்தைப் பிச்சிவிட்டார்கள். ஆளுக்கு ஒரு சமாதானம் சொல்லிச் சமாளிக்க வைப்பதற்குள் மங்களத்தின் பாடு திண்டாட்டமாய்விட்டது.

பேண்டும் மேளமும் முழங்க மாதவியை வயது முதிர்ந்த பத்து சுமங்கலிகள் சேர்ந்து மணையில் உட்கார வைத்தார்கள். ஏற்கெனவே நல்ல அழகு வாய்ந்த மாதவிக்கு தலை சாமான் கட்டி, பூ சுற்றி, வைர நகைகளாகவே அணிவித்திருந்தது அவள் அழகை இன்னும் பன்மடங்கு அதிகமாக்கியது.

மொக்கு தைக்கும் கல்யாணத்திற்கு என்று செய்து இருந்த வைரத் திருகுபில்லை, தகிடி புடவை, ரவிக்கை, தங்க மல்லி மொக்கு எல்லாம் அழகான தட்டில் வைத்து மங்களம் மாதவியின கையில கொடுத்தாள. மாதவி அடக்கமாய் சிரித்த முகத்தோடு

மாமியாரை நமஸ்கரித்து தட்டை வாங்கிக்கொண்டாள். மங்களமும் இன்னும் சில பெண்களும் மாதவியை மணையில் உட்காரவைத்து, வைர பில்லையைத் தலையில் வைத்து, தங்க மல்லி மொக்குகளை ஒவ்வொருவராக ஒன்றை மணப்பெண்ணின் தலையில் கெட்டி மேளம் முழங்க அழகாய் வைத்தார்கள்.

கர்ப்பவதி என்ற தனி அழகுடன் தகடி புடவையும் கல்யாண கோலமும் சேர்ந்து மாதவி சாக்ஷாத் தேவ மாதைப்போல் காட்சி அளித்தாள். மங்களத்திற்கு இருக்கும் சந்தோஷத்தில் தலைகாலே தெரியாது பூரித்துப்போனாள். மருமகளை அழகு பார்த்துப் பார்த்து மாளவில்லை. பலர் சூழ மருமகள் மணையில் இருப்பதைக்கூட மறந்து மாதவியைச் சேர்த்து அணைத்துக் கொண்டு, ''என் கண்மணியே! அழகான பேரப்பிள்ளையோ பேத்தியோ பெற்றுக்கொடுத்துவிடும்மா: என் குறை எல்லாம் தீர்ந்துவிடும்'' என்று கட்டி பல முத்தங்களைக்கொடுத்து தன் அன்பைப் பூராவும் மனதைத்திறந்து காட்டினாள்.

மாதவிக்கு மாமியாரின் ஆழமான அன்பைப்பார்த்து ஒரு புறம் சந்தோஷம் துள்ளியது. அடுத்த க்ஷணம் தன் கணவனின் கடுகடுப்பும், மௌனமும் தோன்றி ஏற்பட்ட எல்லா சந்தோஷமும் ஒரு நொடியில் சுக்கல் நூறாகியது. உடல்பூராவும் குபென்று வெயர்த்துகொட்டி நடுங்கத்துடங்கியது.

இதற்குள் மாதவியின் தாயார் மங்களத்தின் கைகளைப்பிடித்துக்கொண்டு மாதவியும் நாங்களும் செய்த புண்யம் தான் இப்படிப்பட்ட மாமியாரை அடைந்தாள். பகவான் க்ருபையில் மூளி மொக்கை இல்லாது நல்ல குழந்தையைப் பெற்றுக்கொடுத்தால் போதும். அவ்வளவு தான் வேண்டியது. என்று ஆனந்தக் கண்ணீர் பெருகச்சொன்னாள். இதற்குள் சிலர் பன்னீர், சந்தனம், குங்குமம் வழங்கினார்கள்.

பிறகு மாதவியை ஜோடித்திருந்த மகரத்தில் உட்கார வைத்து பாடத் தெரிந்த எல்லோரும் பாடினார்கள். அனைவருக்கும் ஐஸ்போட்ட கிரஷ் வெய்யலுக்கு குளிர்ச்சியாய்க்கொடுத்தார்கள். பாட்டுகள் கும்மாளத்துடன் பாடியபிறகு எல்லோரையும் போஜன சாலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

ப்ரம்மாண்டமான பந்தலில் வரிசை வரிசையாய் இலைபோட்டு ஒரே சமயத்தில் ஆயிரம் பேர் சாப்பிடும்படி மங்களம் திறமையாய் ஏற்பாடு செய்து இருந்தாள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாய்க் கும்பல் கும்பலாய் வந்து இலைகளில் அலங்காரமாய் உட்கார்ந்து போஜனம் செய்யத் தொடங்கினார்கள். மாதவிக்குத் தனி இடத்தில் கோலமிட்டு இலைபோட்டு மங்களமே தன் கைப்பட மருமகளுக்குப் பரிந்து பரிந்து பரிமாறினாள். இதைப் பார்த்து அனைவரும் ஆச்சர்யப்பட்டார்கள்.

ருசியும், மணமும் வீச வந்த அனைவரும் த்ருப்தியாய் போஜனம் செய்துவிட்டு அந்தக் குடும்பத்தை வாழ்த்திமொவாறு எழுந்தார்கள். மங்களத்தின சாமர்த்யமே சாமர்த்யம்! மருமகளிடத்தில் என்ன ஆசை. இந்தக் காலத்தில் தாலி கட்டும் கல்யாணங்கள் கூட இப்படிச் சிறப்பாய் நடத்துவது இல்லை,

இந்தச் சின்ன கல்யாணத்தைத் என்ன சிறப்பாய், வகையாய்ச் செய்தாள். இப்படி உபசாரம் செய்ய யாருக்குத் தெரியும். பேரனாய்ப் பிறந்து மறுபடி எல்லோரும் கூடி இதேபோல் தொட்டில் கல்யாணம் செய்ய வேண்டும். அதுவரை பகவான் க்ருபை செய்தால் போதும் என்று அனைவரும் ஒரேமுகமாய்க் கொண்டாடினார்கள்.

விருந்துண்டபின் அனைவரும் தாம்பூலம் போட்டுக்கொள்ள முன் ஹாலில் வந்து உட்கார்ந்தார்கள். இதற்குள் வீதியில் ஒரே இரைச்சலாய்க் கேட்டது. தம்பதி தம்பதிகளாகவும், குடும்பம் குடும்பமாகவும் பரதேசிகள் ஒரே கூட்டமாய் வீதி முழுவதும் இருந்தார்கள். வீதியில் இருந்த கூர்கா எல்லோரையும் விரட்டினான். ஆனால் கூட்டம் கலையவே மறுத்தார்கள். கூர்காவுக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் வலுத்து கூர்க்கா சில பரதேசிகளைத் தடியால் அடிக்கவும் அடித்துவிட்டான். இதனால் ஒரே கூச்சலும், கலாட்டாவும் அதிகரித்தது. இதற்குள் மங்களமும், அவள் கணவனும், வீட்டில் வந்து இருந்த விருந்தினர் அனைவரும் வீதிக்கு ஓடிவந்தார்கள்.

வீட்டு யஜமானரைப் பார்த்த ஏழைகள், ஐயா...சாமி...நாங்கள் பரதேசிகள்; அன்னத்தைக் கண்ணால் கண்டு எத்தனையோ தினங்கள் ஆகிறது, இந்த வீட்டு சின்ன ஐயாவாம்... அவர்தான் எங்களை எல்லாம் இன்று வீட்டில் விசேஷம்; எல்லோரும் சாப்பிட வாருங்கள். சாதம் போடுகிறோம் என்று சொன்னார். அந்த புண்யவானைக்கூப்பிடுங்கள் சாமி... அவர் சொல்லிதான் வந்தோம் சாமி...என்று ஒரே கூச்சலாய் இரைந்தார்கள்.

இதைப் பார்த்த மங்களத்தின்பாடு திண்டாட்டமாய்விட்டது. கணவனும், மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து முழித்துக் கொண்டார்கள். என்ன செய்வது என்று தெரியாது ஒரே கலவரமாய் விட்டது. உடலும், வயிறும் ஒட்டி உலர்ந்து இருக்கும் பரதேசிகளை விரட்டவும் முடியாது பரிதாபம் தாண்டவமாடியது. எடுத்த எடுப்பில் ஆயிரம் பேருக்கு அன்னமிடுவது என்றால் சாமான்ய காரியமா? அதிலும் இந்தக் காலத்தில் நடக்கும் காரியமா? என்ன செய்வது? என்று தம்பதிகளே குழம்பித் தவித்தார்கள்.

இதற்குள் ஏழைகள் கேட்டைத் தள்ளியவாறு உள்ளே வந்து வீட்டிற்கு முன்பு கூடிவிட்டார்கள். தாயே......சாமி......அந்தப் புண்யவானைக் கூப்பிடுங்கள். அந்த மகாராஜா எங்கே? அவரைக் கூப்பிடுங்கய்யா.........அவர் குடும்பம் நல்லா ஓங்கணும், அவரு கொழந்தே குட்டியோடெ நல்லா இருக்கணும்...பரதேசிங்களுக்கு ஒரு வாய் சோறு போடுங்கப்பா.........என்று ஒரே இரைச்சலாய் இரைந்தார்கள். இதைக் கண்ட முத்துசாமிக்குக் கோபம் உச்சத்தை எட்டியது. ஒரு தர்மப்ரபுவும் இங்கு இல்லை; சொன்ன மகாராஜனையே போய்க் கேளுங்கள். வீண் கலாட்டா செய்தால் போலீஸை அழைத்துத் துரத்தச் சொல்லுவேன் என்று கத்தினார்

இந்த இரைச்சலைக் கேட்ட மங்களம் தவித்தாள். மாதவி இதை எல்லாம் பார்த்து ப்ரமித்து மாமியாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு, அம்மா...இது எல்லாம் அவர் வேலையாய்த் தான் இருக்கும். அன்றே ஏழை பரதேசிகளுக்குப் போடுங்களேன் என்று சொன்னார் இல்லையா, அதற்குத்தான் இவர்களைப் போகச் சொல்லி நம்மைப் பரீக்ஷிக்கிறார். அவர் ஆசையை எப்படியும் பூர்த்தி செய்து விடுங்களம்மா. இந்த ஏழைகளின் வயிறு குளிர்ந்தால் நம் குடும்பமும் குளிரும் என்று மன்றாடினாள்.

இதைக் கேட்ட மங்களத்தின் பாடு இன்னும் த்ரிசங்கு சொர்க்கமாய் விட்டது. மருமகளின் ஆசையைப் பூர்த்தி செய்யா விட்டால் அவள் மனதுக்குத் தாங்கலாய் இருக்குமோ என்னவோ? ஏற்கெனவே தெம்பு இல்லாது இருக்கும் அவள் உடலுக்கு ஏதாவது கெடுதல் ஏற்படுமோ என்னவோ என்ற புதிய கவலை தோன்றி வதைத்தது.

மாதவிக்கு ஒருவாறு சமாதானம் செய்து மெள்ள கணவனிடம் யோசனை செய்யப் போனாள், எப்படியாவது சமாளித்துப் போடலாமா என்று கேட்டதுதான் தாமதம். முத்துசாமி ஒரு குதிகுதித்தவாறு "இந்தப் பரதேசிகளுக்கு தர்மம் செய்வது என்று அன்னமிடத் துடங்கினால் ஈசல் புத்திலிருந்து கிளம்புவதுபோல் இன்னும் பத்து மடங்கு வெள்ளம்போல் வந்துகொண்டே இருக்கும். இந்த வெள்ளத்திற்கு அணைபோடக் கிளம்பினால் பிறகு நாமும் அவர்களுடன் பரதேசிகளாய் வெளியேற வேண்டியது தான். உன் அழகான பிள்ளை ரத்னத்தின் வேலைதான் இந்த அமர்க்களம்! என்ன வேணுமானாலும் செய்துகொள். எனக்குத் தெரியாது" என்று இரைந்தவாறு கோபமாய்ச் சென்று விட்டார்.

பாவம், மங்களம் என்ன செய்ய முடியும்! வீதியில் தலைகாட்ட முடியாது பரதேசிகளின கூச்சல் வானை அளாவியது. பாக்கு வெட்டி மத்தியில் அகப்பட்ட பாக்கைப் போல் தவித்தாள். "பகவானே! நீதான் இந்த தர்மசங்கடத்திற்கு வழி வகுக்க வேண்டும்!" என்று கடவுளை வேண்டினாள். அவள் உள்ளம் தாமரையிலைத் தண்ணீரைப்போல் தத்தளித்தது.

---

## பக்தன் அணா 6

மலர் 5. இதழ் 8. மன்மத ஞூ கார்த்திகை மீ நவம்பர்—டிசம்ப '55


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஸ்ரீ சிக்கதேவராஜ விண்ணப்பம் | 596 | ப்ரபஞ்சத்தின் உத்பத்தி | 638 |
| கலியன் விக்ரஹ ஈடுபாடு | 603 | ருதுகாலங்களில் தெய்வ வழிபாடு | 638 |
| வேதாந்த தேசிகனும் ஹயக்ரீவ பகவானும் | 605 | வால்மீகியும் கம்பரும் | 645 |
| பாசுரமாலை | 610 | ஸ்ரீசங்கர விஜயம் (முடிவு) | 646 |
| கீதா தாத்பர்யம் | 612 | ப்ரகாலகாமணி | 651 |
| கண்ணன் பெருமை | 619 | E. R. ஸ்ரீரங்காசார்யர் | 654 |
| திவ்யபரபந்தமும் திருவாய்ப்பாடியும் | 625 | உத்ஸவாதிகள் முதலியன | 656 |

# ஆன்ம தத்துவம் (ஆன்மாவின் இயல்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத்தலைமைத் தமிழ் ஆசிரியை,
சென்னை லேடிவில்லிங்டன் உயர்தரக் கலாசாலை.

[ஆகஸ்ட் இதழ்த் தொடர்ச்சி.]

அவ: இங்ஙனம் ஆன்மாவிற்கும், அறிவிற்கும் உள்ள பொதுப்பட்ட இயல்பைச் சொல்லி, அவற்றுள் அறிவிற்கில்லாத ஆன்மாவின் இயல்பையும், ஆன்மாவிற்கில்லாத ஞானத்தின் இயல்பையும், சொல்லுவதாக அவற்றை அறிய வேண்டுமவர் கேட்கும் வினாவை எடுத்தியம்புகிறார்:

**மூலம்: 63.** ஆனால், ஜ்ஞானத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் வாசி என்? என்னில்;

பொருள்: ஆனால், அறிவிற்கும், ஆன்மாவிற்கும் வாசி (அறிவிற்கில்லாத ஆன்ம இயல்பு, ஆன்மாவிற்கில்லாத அறிவினியல்பு) யாது? என்றால்;

அவ: இவ்விரண்டிற்குமுள்ள வாசியை அருளிச்செய்கிறார்:

**மூலம்: 64.** ஸ்வரூபம்—தர்மியாய், ஸங்கோச விகாஸங்களுக்கு அயோக்யமாய், தன்னையொழிந்தவற்றை ப்ரகாசிப்பியாமலே தனக்குத்தான் ப்ரகாசிக்கக் கடவதாய், அணுவாயிருக்கும். ஜ்ஞாநம்—தர்மமாய், ஸங்கோச விகாஸங்களுக்கு யோக்யமாய், தன்னையொழிந்தவற்றை ப்ரகாசிப்பிக்கக்கடவதாய் தனக்குத்தான் ப்ரகாசியாதே ஆத்மாவுக்கு ப்ரகாசிக்கக்கடவதாய், விபுவாயிருக்கும்.

பொருள்: ஆன்மா, பண்பியாய், சுருக்க விரிவுகளுக்குத் தகுதியற்றதாய், தன்னையொழிந்த மற்றப்பொருள்களை ஒளிர்வியாமல் தனக்குத்தான் ஒளிரக்கடவதாய், அணுவாயிருக்கும். அறிவு, பண்பாய் சுருக்கவிரிவுகளுக்குத் தகுதியுற்றதாய், தன்னையொழிந்த மற்றப்பொருள்களை ஒளிர்விப்பதாய், தனக்குத்தான் ஒளிராமல் ஆன்மாவிற்கு ஒளிர்வதாய் எங்கும் பரந்த பொருளாயிருக்கும்.

இவற்றால், ஆன்மா பண்பி, ஞானம் பண்பு என்றும், ஆன்மாவின் இயல்பும், ஞானத்தின் இயல்பும் வெவ்வேறுபட்டவை என்றும் அறிகிறோம்.

இவ்விரண்டினுள் பண்பாகிற ஆன்மாவிற்கு மாறுதல் இல்லை. பண்பாகிற ஞானத்திற்குச் சுருக்கவிரிவுகளாகிற மாறுதல்கள் உண்டு.

அவ: எல்லாச் சேதனருடைய அறிவும் ஒருபடிபட்டிராமையைப்பற்றி அருளிச்செய்கிறார்:

மூலம்: 65. அதில் சிலருடைய ஜ்ஞாநம் எப்போதும் விபுவா யிருக்கும்; சிலருடைய ஜ்ஞாநம் எப்போதும் அவிபு வாயிருக்கும். சிலருடைய ஜ்ஞாநம் ஒருக்கால் விபுவாய், ஒருக்கால் அவிபுவாயிருக்கும்.

பொருள்: அதில் நித்தியருடைய ஞானம் எப்போதும் பரந் திருக்கும்; பத்தருடைய ஞானம் எப்போதும் குருகியிருக்கும்; முத்தருடைய ஞானம் ஒருபோது குருகியும், ஒருபோது பரந்தும் இருக்கும்.

விளக்கம்: பகவானுடைய சொரூபத்தையும், குணங்களையும்' விபூதிகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் திருவடி திருவனந்தாழ் வான் முதலிய நித்தியசூரிகளுடைய ஞானம் சுருங்குதலின்றி எப்போதும் பரந்தே இருக்கும்; "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பு"மாயிருக்கிற நம் போன்ற பக்தருடைய ஞானம் அவரவர் கன்மத்திற்கேற்ப சுருக்கவிரிவுகளைப் பெற்றிருக் கும். 'கரை கண்டோர்' என்கிறபடியே பகவான் அருளினால் சம் சாரக்கடலைக் கடந்து முத்தியாகிய அக்கரையை அடைந்த சுகர் வாமதேவர் முதலிய முத்தருடைய ஞானமோ, அவர்களுடைய முன்நிலையில் (இவ்வுலகில் வாழுங்ககால்) சுருங்கியும், பின்நிலையில் (முத்தியின்புறுங்கால்) பரந்துமிருக்கும்.

மூலம்: 66. ஜ்ஞாநம் நித்யமாகில், "எனக்கு ஜ்ஞாநம் பிறந்தது, நசித்தது" என்கிறபடியென்? என்னில்;

பொருள்: ஞானம் அழிவற்றப் பொருளாயின் எனக்கு ஞானம் பிறந்தது. எனக்கு ஞானம் அழிந்தது எனச்செப்புவது யாங்ஙனம் பொருந்தும்? என்னில்;

அவ: மேற்குறிப்பித்த விஷயத்திற்கு விடை அருளிச்செய் கிறார்:

மூலம்: 67. இந்த்ரியத்வாரா ப்ரஸரித்து, விஷயங்களை க்ரஹிப்பது மீளுவதாகையாலே, அப்படிச் சொல்லக் குறையில்லை.

பொருள்: ஞானம், கண் முதலிய ஐந்து இந்திரியங்களின் வாயி லாக வெளிப்போந்து பொருள்களை அறிவது மீளுவதாக இருத்த லின், அங்ஙனம் செப்பக் குறையில்லை.

அவ: இங்ஙனம் கண் முதலிய இந்திரியங்களின் மூலமாக வெளிப்படும் ஞானம் ஒன்றாயிருக்க, பொருள்களை அறியும்போது காணல் கேட்டல் என்னும் பெயர்களைப் பெற்றுப் பலவாய் ஒளிரு மாறு யாங்ஙனம்? என்னும் ஐயத்திற்கு விடை பகருகிறார்:

மூலம்: 68. இதுதான் ஏகமாயிருக்கச் செய்தே நாநாவாய்த் தோற்றுகிறது ப்ரஸரண பேதத்தாலே.

பொருள்: இந்த ஞானந்தான் ஒன்ருகவிருப்பினும், பலவாகத் தோற்றமளித்துப் பல பெயர்களைப் பெறுதற்குக் காரணம், இந்திரியங்களின் மூலமாக வெளிப்படுதல் பலவாயிருத்தலினுலேயேயாகும்.

அவ: இங்ஙனம் ஞானத்தின் நித்தியத்துவத்தை (தோற்றம் அழிவு அற்ற தன்மையை) அருளிச்செய்தார்முன், இனி அந்த ஞானத்தினுடைய திரவ்வியத்துவத்தை சொல்வதாக எண்ணி, அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் எனக் கருதுகின்றவர்களின் வினவை எடுத்துரைக்கிருர்:

மூலம்: 69. த்ரவ்யமானபடி என்னென்னில்?

அவ: அதற்குத் தக்க காரணங்களைக் காட்டி, அஃது ஒரு பொருள்தான் என்பதை நிலைநிறுத்துகிருர்:

மூலம்: 70. க்ரியா குணங்களுக்கு ஆச்ரயமாய், அஜடமாயிருக்கையாலே த்ரவயமாகக் கடவது.

பொருள்: செயல்களுக்கும், குணங்களுக்கும் இருப்பிடமாயும், தானே தோற்றும் பொருளாயும் இருத்தலின் இது திரவியமாகக் கடவது.

விளக்கம்: சுவர், அதன் நிறம் ஆகிய இரண்டையும் நோக்குங்கால், சுவர் பண்பியாகவும், நிறம் பண்பாகவும் உள்ளது. ஆதலின், சுவரைத் திரவியம் என்றும், நிறத்தைக் குணமென்றும் சொல்லுவரேயல்லாமல் இவ்விரண்டையும் திரவியம் என்று சொல்வதில்லை. ஆனுல், ஆன்மாவும் அதனிடமுள்ள ஞானமும் பண்பி பண்புகளாக இருப்பினும், இரண்டும் திரவியங்களாகவே இருக்கின்றன. ஏனெனில், இச்சூத்திரத்தில் குறிப்பித்த இயல்புகள் ஞானத்திற்கிருத்தலின், இஃதும் ஒரு திரவியமாயிற்று.

அவ: முன் ஞானத்திற்குத் தாம் அருளிச்செய்த அஜடத்வ (தானே தோற்றும் பொருளாயிருத்தல்) விஷயமாகக் கேட்போர் வினவைப் பகருகிருர்:

மூலம்: 71. அஜடமாகில் ஸுஷுப்திமூர்ச்சாதிகளில் தோற்ற வேண்டாவோ? என்னில்;

பொருள்: ஞானம் தானே தோற்றும் பொருளாயிருப்பின், ஆன்மாவைப் போன்றே நல்ல உறக்கத்திலும், மூர்ச்சையிலும் தோன்றிக்கொண்டிருக்க வேண்டாவோ? என்னில்;

அவ: அதற்கு விடை பகருகிருர்: (தொடரும்)

# வாழ்க்கையில் ஒரு குறிப்பு

ஒரு முக்யமான விஷயத்தைக் கடிதம் எழுதக்கூட சோம்பேறித்தனப்பட்டுக் கொண்டு பேசாமலிருந்து வசவு வாங்கும் நான் சில மாதங்களாகத் துடர்ந்து ஜகன்மோகினியை என் சகோதரி வீட்டில் படித்தேன். வாழ்க்கையில் ஒரு குறிப்புதான் என் மனத்தை ரொம்பவும் கவர்ந்தது. அதைப் படித்த பிறகு எனக்கும் எழுத வேண்டுமென்று ஆசை உண்டாகியதால் இதை எழுதத் துணிந்தேன்.

என் மாமியார் மிகமிகத் தங்கமானவர். என் நாத்தநாராவது சில சமயம் என் மீது பொருமைப்படுவாள்; மாமியார் என்னை எத்தனையோ உசத்தியாகவே வைத்திருந்தாள். என தலைவிதி எனக்குக் குழந்தையே பிறக்கவில்லை. உலகத்திலுள்ள அத்தனை வ்ருதங்களும் அனுஷ்டித்தாகி விட்டது; எங்க மாமியாரின் அன்பும் தளர்ந்து விட்டது. சுத்தாத கோயில் பாக்கி இல்லை. எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்றதால் நான் பிறந்தகம் போனேன்.

அம்மா டைபாயிடில் செத்துப் பிழைத்தாள். அவள் சற்று எழுந்து நடமாடும் நிலைமை வந்த பிறகு நான் என் புக்ககம் வந்தேன். இதற்குள்ளேயே நான் விஷயம் கேள்விப்பட்டு அதை நம்பாது வெறுத்தேன். நான் இன்னும் வரவில்லையே என்று என் மாமியாரோ கணவனோ கடிதமே எழுதவில்லை. நானாகவே கூடை நிறைய பக்ஷணங்களுடன் வந்து சேர்ந்தேன். மாமியார் வழக்கத்திற்கு விரோதமாய் ஏதோமாதிரி முகத்தை வைத்துக்கொண்டு. வேண்டா வெறுப்பாய், இதற்குள் என்ன அவஸரம்! அம்மாவுக்கு ஒன்றாகக் குணமானப்பறம் வரக்கூடாதோ! என்றார். அதே சமயம் காலில் மெட்டியின் கலகலவென்ற ஓசையுடன் ஒரு சாதாரண அழகுடைய பெண் மாடியிலிருந்து இறங்கி உள்ளே போனாள். போகும்போது என்னை நின்று பார்த்துவிட்டுப் போனாள். அவள் யாரென்றே எனக்குத் தெரியாது. நான் வழக்கப்படி என் மாமியாரிடம் இவள் யாரென்று கேட்டேன்.

என் மாமியார் அன்று வரையில் பேசாத முறையில், யாரா! எங்கள் குலத்தை விளக்க வந்த லக்ஷ்மி என்றார். அப்போதும் மகாமுட்டாளாகிய எனக்குப் புரியவே இல்லை. என்றாலும் நான் ஏற்கெனவே கேள்விப்பட்டபடி இருக்குமோ என்று ஒரு அதிர்ச்சி உண்டாகியது. எனக்குத் தலை சுற்றி ஏதோ செய்தது. உடனே மூட்டைகளை வைத்துவிட்டு உள்ளே போனேன்; அந்தப் பெண் தேம்பித்தேம்பி அழுதுகொண்டே நிற்பதைக் கண்டு எனக்கு ஒன்றுமே புரியாது விடுகதை போலிருந்தது. அந்தப் பெண் எதிரிலேயே நான் போய் நீ யாரம்மா! ஏன் அழுகிறாய் என்று தைரியமாய்க் கேட்டுவிட்டேன்.

உடனே விஷயம் பூராவும் விளங்கி விட்டது. நான் கேள்விப்பட்டபடி சகலமும் உண்மையாகி விட்டது. மூத்தமனைவிக்குப் பயித்தியம் பிடித்து விட்டதால் பிறந்தகம் போய் விட்டாள் என்று பொய் கூறி என் கணவருக்கு இந்தப் பெண்ணைத் திருநெல்வேலியிலிருந்து கல்யாணம் செய்து கொண்டு வந்தார்கள் என்றும் அந்தப் பெண்ணுக்குத் தகப்பனார் இல்லை. தாயார் ஒரு ஓட்டலில்

வேலை செய்கிறார் என்றும் கூடப் பிறந்தவர்கள் 4 பெண்கள் என்றும் நல்ல இடமாகக் கிடைத்ததால் பயித்தியம் பிடித்த மனைவி இனி எங்கே வரப்போகிறாள் என்றும் துணிந்து தன்னைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டதாகவும், நீங்களா அந்த மனுஷி? இவர்கள் பொய்யா சொன்னார்கள்? என்று அந்தப் பெண் விம்மிவிம்மி அழுதபடியே சொல்லி விட்டாள்.

முதலில் கொஞ்ச நாள் எனக்கிருந்த சங்கடம் சொல்ல முடியாது. தற்கொலைக்குக்கூட நான் துணிந்துவிட்டேன். ஆனால் என்கூடப்பிறந்த சகோதரிகூட அத்தனை அன்பாயும் மரியாதையாயும் நடக்கமாட்டாள்; அவ்வளவு மேன்மையாக அந்தப் பெண் என்னிடம் நடந்துகொண்டு என் மனத்தை முற்றிலும் மாற்றி விட்டாள். அதோடு அடுத்த வருஷமே சொர்ணவிக்ரகம்போல ஒரு குழந்தையையும் பெற்று எனக்கே கொடுத்து என்னை வெகு வாய்ப் பூரிக்கச் செய்துவிட்டாள். விதி செய்யும் வேடிக்கையைப் பாருங்கள்.

இத்தனை வருஷம் கொட்டு, மலடு என்று பெயர் வாங்கிய எனக்கு உலகமே ப்ரமிக்கும்படி முதல் ப்ரஸவத்திலேயே இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துவிட்டது. அடுத்த வருஷம் இளையாளுக்கும் இரட்டையாய் இரண்டு பெண்குழந்தைகள் பிறந்து விட்டது. அந்தப் பரிதாபத்தை என்ன சொல்வது. ஒரே சமயத்தில் நான்கு பச்சைக்குழந்தைகளை வளப்பதற்குள் என் மாமியார் திணறித்தான்போய்விட்டார். என்லக்ஷ்மி, அதான் இளையாள் பேரு. இப்போதும் என்னிடம் வெகு ப்ரியமாகத்தானிருக்கிறாள். இன்று வந்துள்ள சட்டம் அன்று இல்லாததால் ஒரு குடும்பத்தைப் பாதுகாக்க இரண்டு மனைவிகளும். ஒரு குழந்தைக்கு ஆசைபட்ட என் மாமியாருக்கு இன்று 15 பேரன்பேத்திகளும் உண்டாகித் தவிக்கிறார். எப்படியோ குடும்பம் நடக்கிறது. ஏகபத்னி வ்ருதமான சட்டம் அப்போதே இருக்குமானால் நம் குடும்பம் இப்படி அவதிப்படுமா என்கிறாள் லக்ஷ்மி. எல்லாம்கடவுளின் சோதனை என்றேன் நான்.

இந்த விஷயத்தை நான் எதற்காக எழுதினேன் என்றால் நானும் லக்ஷ்மியும் இருக்கும் அன்யோன்யம்போல் கூடப்பிறந்தவர்களும் இருக்கமாட்டார்கள். ஓரகத்திகளும் இருக்கமாட்டார்கள். அவளும் நானும் உயிரும் உடலும்போலத்தான் இருக்கிறோம். ஆனால் அவள் குழந்தைகளும் என் குழந்தைகளும் சதா சண்டைதான் பிடிக்கிறார்கள். என் மாமியார் தான் அதற்கு நீதிபதி. என்கணவர் பாக்குவெட்டியிலகப்பட்டவர் போலத்தான் தவிக்கிறார். பாழும் பசங்களில் பெண்கள்தான் அதிகம். அவர்களுக்குக் கல்யாணத்திற்கு என்ன செய்வது, வை. மு. கோ. சொல்வதுபோல பிள்ளைவீட்டுக் கொள்ளைக்காரர்களுக்கு வரதக்ஷிணை கொடுப்பதற்காக நானும் கொள்ளைதான் அடிக்கவேணும் என்கிறார் என் கணவர். திருச்சி மாதர் மகாநாட்டில் வை. மு. கோ. வரதக்ஷிணை ஒழிப்புச் சட்டம் வரவேண்டும் என்று பேசியபடி இன்றில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் வந்தே தீருமல்லவா! என்றுதான் நம்பி இருக்கிறோம்.

—"உண்மை விளம்பி"

# அன்பர்களின் கடிதங்கள் (ஸாரம்)

1. நல்ல ருசிகரமான சுயசரிதம் எந்த மேதைகளுடையதாவது ஏன் வெளியிடக்கூடாது? அடுத்த 56-வது வருஷத்திய புது இதழில் எதிர்பார்க்கிறேன். —**வைத்தியநாதன், புதுவை.**

பதில்—விரைவில் வெளிவரும்.

2. சகோதரி! தாங்கள் இரண்டு மாதங்களாக அறிவுப் போட்டி போடுவதை நாங்கள் மிகவும் விரும்புகிறோம், ஆனால் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் ப்ரசுரித்திருப்பதை பெரியவர்களால்தான் பிரித்து விடை கொடுக்க முடியுமேயன்றி சிறியவர்களால் முடியாது. தயவுசெய்து சிறியவர்களுக்கும் மூளைக்கு வேலை கொடுக்கும் முறையில் பாலர்மோகினியில் வெளியிடும்படிக் கேட்டுக் கொள்கிறேன். —**நாகலக்ஷ்மி, தஞ்சாவூர்.**

பதில்—அடுத்த இதழ் முதல் வெளியிடுகிறேன்.

3. வரதக்ஷிணை ஒழிப்பைப்பற்றி தாங்கள் விடாது எழுதுகிறீர்களே. இதைத் தடுக்க வழிசெய்ய முடியுமா? இதை எப்படி ஒழிக்க முடியும்! —**சாம்பசிவன், திருநெல்வேலி.**

பதில்—வ்யாதி வராமல் தடுப்பதற்குத்தான் பெரியவர்கள் பல பல விதத்தில் ஆகார நியதி உள்பட வழி வகுத்திருந்தும் எப்படியோ வ்யாதி வந்துவிடுகிறது. தொத்து வ்யாதியானால் அநேகர் அவஸ்தைப்படுகிறார்கள். பலபல டாக்டரிடம் ஓடுகிறார்கள்... இதுபோல்தான் வரதக்ஷிணை என்கிற தொத்து வ்யாதி நம் சமூகத்தில் வந்து பீடித்துவிட்டது. வாழ்க்கை தீபத்தில் எழுதியிருப்பதுபோல் பல மாணவர்கள் முன்வந்தால் இந்த வ்யாதி தானாகச் சிறிது குறையும். இதைச் சட்டமாக்கி ஸர்க்கார் உதவியுடன தடுத்தால் பூராவும் அடுத்த தலைமுறைக்குள்ளாகவாவது ஒழியும் என்பது என் நம்பிக்கை. எறும்பு ஊறக் கல்லும் தேயும என்பதுபோல் இதைப்பற்றி ஓயாது கிளர்ச்சி செய்து தடுத்துவந்தால்ஒருசிறிதுஉடனடிபலன்கிடைக்கலாம்,—ஆசிரியை.

சென்ற அறிவுப்போட்டியின் சரியான விடை:—

1. சஷ்டிபூர்த்தி.
2. வைகுண்ட ஏகாதசி.
3. நாக சதுர்த்தி.

மூன்றும் சரியாக எழுதியவர்களின் பெயர்கள்:—

ஸ்ரீரங்கம்மாள், திருச்சி; பட்டாபிராமன், திருப்பதி; ஸ்ரீநிவாஸ அம்மாள், சென்னை; ராமநாதன், சென்னை; புருஷோத்தமராவ், வண்ணாரப்பேட்டை; நளினி ராமச்சந்திரன், திருவொற்றியூர்; ஸ்ரீநிவாஸராவ், அரக்கோணம்; மாதவாச்சார், சாத்தூர்; ஜனகவல்லி, ராமநாதபுரம்; விஜயராகவன், சேந்தனூர்; மங்களம் க்ருஷ்ணமூர்த்தி, குடியாத்தம்; பாப்பாத்தியம்மாள், ராயபுரம்; செங்கமலத்தம்மாள், தர்மபுரி; சேஷாசலம், திருச்சி; ரமணி பரமேச்வரன், மேலார்க்கோடு; சி. பாஸ்கரராம், தியாகராயநகர்; எஸ். ராஜலக்ஷ்மி, திருவல்லிக்கேணி.

பலர் இரண்டு தப்பு, ஒரு தப்புள்ள விடைகளே அனுப்பி இருக்கிறார்கள். இந்த அறிவுப்போட்டியின் மூலம் ஒருபொழுது போக்கும விளையாட்டாக அறிவு வளர்ச்சியடைவதையும் பாராட்டி எழுதியுள்ளவர்களுக்கு எனது வந்தனங்கள் —வை. மு. கோ.

துப்பறியும் வீர சிங்கம் **ராஜாராம் நாயுடு**

வை. மு. கோ. 112-வது நாவல்

## 21. கூர்மை மதியின் நேர்மைப் பலன்

இந்த இரண்டு பேர்களில் யாரைக் கூப்பிடுவது? எனக கொன்றுமே புரியவில்லையே! என்று கலவரப்பட்டபடியே மெல்ல அந்த மனிதர் நிற்குமிடத்திற்குச் சென்று வெகு கூர்மையாகக் கவனித்தாள். அன்னியருடன் அனுவச்ய மாய்ப் பேசியறியாத அவளுக்கு இதெல்லாம் பெரிய வேதனையாகவே தோன்றியது. மெல்ல அவரெதிரில் சென்று உற்று கவனித்தவாறு பாதி வார்த்தை தொண்டையிலேயே அடைத்துக்கொள்ளப் பாதி சப்தமே வெளியில் வர....ஸார்....தாங்கள்....என்று மெல்ல ஆரம் பித்தாள்.

அம்மனிதன் வியப்புடன்...நீங்கள் யாரம்மா! நான் எங்கே போகிறேன் என்று கேட்கிறீர்களா! துணைக்கு வேணுமா....நான் கல்கத்தா போகிறேன். அங்குதான் நீங்களும் போக வேணுமா.......என்றார். பங்கஜத்திற்கு மிகவும் வெட்கமாகிவிட்டது. ஏதோ பதில் சொல்ல வேணுமே என்றதனால் அசடுவழிய...மன்னிக்க வேணும். எங்கள் பந்து ஒருவரின் சாயலாகவே உங்களைப் பார்த் தால் தோன்றியது; அதனால் கேட்டேன் என்று சொல் லிக்கொண்டே சந்தேகப்பட்ட இன்னொருவரின் முன்பு சென்று உற்று கவனித்தாள்.

வண்டி புறப்படும் அறிவிப்பு மணி யடித்துவிட்டது. அந்த மனிதர்தான் தான் தேடிவந்தவர் என்கிற உறுதி உண்டாகியதும் அவரெதிரில் தைரியமாகச் சென்று, ஐயா! வணக்கம். தயவுசெய்து இப்படி ஒரு வினாடி வரவேணும், என்று கூப்பிடும்போது வழக்கமில்லாத வழக்கமாகை யால் சரீரமே நடுங்கியது. வெகு மரியாதையுடன் அந்த மனிதன் பத்தடி விலகிவந்து வெகு சாந்தத்துடன், என்னை யாம்மா அழைத்தீர்கள். மெத்த சந்தோஷம்! என்னால் ஏதாவது உதவி ஆகவேண்டியதிருக்கிறதா! சொல்லுங்கள்! முடிந்ததைச் செய்கிறேன்....நான் ஒரு வைர வியாபாரி என்று கூறும்போது பாவம், பங்கஜத்தின் ஏமாற்றம் சகிக்கமுடியாத அவமானத்தில் முடிந்தது. பெரிய பதி

ரங்கமான ஒரு ரயிலடியில் தான் இப்படி முன்பின் தெரியாதவர்களிடம் பல்லிளிப்பது எத்தனை அவமானம் என்று மனம் கூறியதால் முகத்தில் அசடு வழிந்தது....ஸார்! நான் நினைத்தமனிதர்தான் தாங்கள் என்று ஏமார்ந்துவிட்டேன் மன்னிக்க வேண்டும் என்று கூறியவாறு மீண்டும் காலடி சென்றாள். இதென்ன சோதனையோ! இதில் ஜெயிக்க என்னால் முடியாதுபோலிருக்கிறது. எது எப்படியாவது ஆகட்டும்என்று வீட்டிற்குப் போய்விடுவோம். அவரிடம் வசவு வாங்கிக்கொண்டாலும் தேவலை என்ற மனச் சலிப்பும், ஒருவிதமான வெறுப்பும் உண்டாகிவிட்டதால் மனது கலங்கியவளாய் ப்ரயாணிகள் உட்காரும் தனி விடுதியில் போய் அமர்ந்தாள்.

அந்த வண்டியும் ஊதிக்கொண்டே கிளம்பிவிட்டது. இவளால் அதற்குமேல் பொறுமையை வகிக்க முடியாததால் வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள். கூடவந்துள்ள கான்ஸ்டேபிலுக்கு விவரமே புரியாததால் கேட்பதற்கும் பயந்து கூசியவாறு பின் துடர்ந்தான்.

நேரே ஆஸ்பத்ரிக்கு பயந்து நடுங்கிக்கொண்டே வந்தாள். மகா முன்கோபியும் நினைத்த காரியம் நினைத்த க்ஷணத்தில் முடியாவிட்டால் அதோடு எல்லோரிடமும் சிறிவிழுந்து சிம்ம கர்ஜனை செய்யும் மனிதரின் முன் தோல்விக் கவசமணிந்து எப்படிப் போய் நிற்பது என்ற பயத்தால் தியங்கித்தியங்கி சென்றாள். நடுக்கலின் வேகம் வெயர்வை வெள்ளம் குபீரென்று பொங்கி வழிகிறது. இந்தத் தத்தளிப்பான நிலைமையில் கணவனின் எதிரில் வரும்போது தன் கண்களையே தான் நம்பாமல் ஒரு துள்ளுதுள்ளி வியப்புக் கடலில் குதித்தவள்போல் ப்ரமித்து நின்றாள். எந்த ஒரு மனிதனைத் தேடிக்கொண்டு இத்தனை நேரம் அலைந்துத் திரிந்து அவஸ்தைப் பட்டாளோ! அதே மனிதன் தன் கணவனுக்கு எதிரில் மரியாதையாகக் கையைக் கட்டிக்கொண்டு நின்று பேசுவதைக் கண்டு ஆச்சரியம் தாங்காமல் தன்னை மறந்து எதிரில் வந்து பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நின்றாள்.

இவள் வரவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஜம்புலிங்கம் மிக்க மகிழ்ச்சியுடன்...பங்கஜம்! எந்த காரியமாக உன்னை நான் அனுப்பினேனோ அந்தக்காரியத்தைக் கடவுள் க்ருபையினால் அனுயாஸமாக முடித்துக் கொடுத்து விட்டார். நீ இன்னும் வரவில்லையே என்று எதிர்பார்த்திருந்தேன். என்னுடைய இந்தக் காரியம் வெற்றி பெற்று விட்டது. இதற்கும் ராஜாராமன்தான் காரணம் பங்கஜம்! என்பதற்குள்...அப்பாடா! பிழைத்தேன்! செய்யாத காரியத்தைச் செய்யப் புகுந்த சிறிது நேரத்திற்குள் நான் பட்டபாடு பகவானுக்குத்தான் தெரியும். இவரைப் போலவே உடையணிந்திருந்த சிலரைக் கண்டு பேசி அவமானமடைந்து மனம் உடைந்திடுமோ என்று நடுங்கிக்கொண்டே வந்தேன். பகவான் என் பங்கிலிருந்து என்னை ரக்ஷித்துவிட்டார். இவர்

எப்படி வந்தார்? ராஜாராமன் தான் டாக்டர் வீட்டில் படுத்திருப்பதாகச் சொன்னீர்களே! அவன் எப்படி இவரைக் கண்டு அழைத்து வர முடிந்தது? என்று மரியாதையாகக் கேட்டாள்.

ஜம்பு:—பங்கஜம்! பகவானுடைய விசித்திரமான மாயை இருக்கிறது பாரு. அதை யாராலும் கண்டு பிடிக்கவே முடியாதல்லவா? அவன் செய்துள்ள லீலையில் இதுவும் ஒன்று. ராஜாராமன் திடீரென்று எதையோ நினைத்தவனாய் டாக்டரைக் கூப்பிட்டானாம். ஆனால் டாக்டர் யாரிடமோ வெகு முக்யமான விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால் வரமுடியாதென்று சொன்னாராம்.

தான் மறுபடியும் அந்தக் கைதியை—அதான் பேருக்காரனைப் பார்க்க வேண்டுமென்று எதனாலோ எண்ணினானாம். தூக்கமும் பிடிக்காமல் மனது ஒரு நிலையில் கட்டுப்படாமல் அலைந்ததால் தன் தந்தையை டாக்டரிருக்கும் இடத்திற்குத் தூக்கிக்கொண்டு போகும்படிக் கேட்டானாம். பையன் செய்கை எல்லாம் மகத்தான வெற்றியாயிருப்பதால் பிதா சந்தோஷத்துடன் தூக்கிக்கொண்டு சென்றாராம். அங்கு இவரும் இவருடைய மதிப்பு வாய்ந்த எஜமானரும் இருக்கக் கண்ட பையனின் மூளை என்னால் கூட சாதிக்க முடியாத விதம் ஆழமாக வேலை செய்ததாம்.

அதாவது,—என்னோடு அவன் ஸ்டேஷனில் சற்று நேரமும் வீட்டில் சற்று நேரமும் தங்கியிருந்தான் பாரு, அப்போது என்னிடமுள்ள கைதிகளின் புகைப்பட ஆல்பத்தை எப்படியோ அவன் எடுத்துப் புரட்டி பொம்மை பார்த்துக் கொண்டிருந்தான். பையன் வெகு கெட்டிக்காரனாகவும் எனக்கு மிகவும் பிடித்திருப்பவனாகவும் இருந்ததால் அதை நான் தடுக்கவில்லை. கைதிகளின் படங்கள் தானே என்றும் தோன்றியது. பையன் இவைகளைக் கண்டு பயப்படுவானோ! என்ன செய்வான் என்பதைப் பார்க்கவும் ஒரு பெரிய ஆவல் தூண்டியதால், டேய் பையா! இதெல்லாம் என்னவென்று தெரியுமா! அத்தனை பேர்களும் கொலைகாரக் கைதிகள், திருட்டுக் கேடிகள், மோசக்காரப் பேய்கள் என்று சொல்லும்போது அவன் சற்றுகூட பயப்படாமல் அடேடேய்! இத்தனை பேருமா கைதிகள்! இவர்கள் இத்தனை பேர்களுக்கும் கடவுளிடம் பயமே இல்லையா! நான் விளையாட்டுக்காக ஒரு பொய் சொன்னால்கூட எங்கப்பா என்னை அடித்து விடுவார். எங்கம்மா சூடுபோட்டு மிரட்டுவாளே! இவர்களுடைய அப்பா அம்மா அப்படிச் செய்திருக்கமாட்டார்களா! கொலை செய்வதென்றால் எப்படி மாமா செய்வார்கள்......... என்றெல்லாம் மூளையை உபயோகித்துக் கேள்விகளைக் கேட்டு என்னைத் திணரவடித்து விட்டான். அதன் பலன் உடனே கைம்மேல் இதோ கிடைத்து விட்டது பாரு! பையனை நினைக்கநினைக்க என்னிதயம் பூரிக்கிறது.

முகத்தில் அம்மை வடுவும், வலது காதில் ஒரு பாலுண்ணி உருண்டையும் நன்றாகத் தெரியும்படி புகைப்படத்தில் எடுத்

திருந்த அடையாளம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டானும். உடனே பையன் இவர்மீது சந்தேகித்து டாக்டரிடம் காதோடு ரகஸியமாக...டாக்டர் மாமா! இவன் யாரு...இன்ஸ்பெக்டர் மாமாவிடம் இருந்த கைதிகள் புகைப்படம் நிறைந்த புத்தகத்தில் இதே முகம் பார்த்தேன். ஆகையால் உடனே ஜம்புலிங்க மாமாவுக்குச் சொல்லிவிடுங்கள்...ஆசாமியை விடாதீர்கள் என்று சொல்லியதைக் கேட்டதும் உண்மையில் அத்தனை பெரியவரான டாக்டர் திடுக்கிட்டாராம். சின்னஞ்சிறு பையன் சொல்வது நிஜமாக இருக்குமா! என்ற சந்தேகமும் உண்டாகியதாம். ஏதோ சாக்குச்சொல்லி அவர்களை உட்கார வைத்துவிட்டு என்னிடம் டெலிபோன்மூலம் சகலத்தையும் சொன்னார்.

எனக்கிருந்த ஆனந்தத்தை அளவிட்டே சொல்லி முடியாது பொங்கியது. எந்த ஒரு மனிதரைத் தேடியழைத்து வரும்படி உன்னை அனுப்பினேனே! அதே மனிதனாக இருக்குமோ என்ற சந்தேகம் உண்டாகியதால் உடனே அவர்களை இங்கு அழைத்து வரும்படி நான் டாக்டரிடம் சொல்லிவிட்டு எதிர்பார்த்திருந்தேன்.

அந்தப் புகைப்படப் புத்தகத்தில் இவருடைய படமும் இருக்கிறது...என்றபோது பங்கஜம் திடுக்கிட்டு...என்ன! இவருடைய படமா! இவர் கைதியா...என்று அலறியவாறு கேட்டு அந்த மனிதனின் முகத்தை ப்ரமையும் பீதியும் கலந்தவாறு பார்த்தாள்

அங்கு உட்கார்ந்திருக்கும் பெரிய மனிதர் முகத்தில் எத்தகைய மாறுதலுமின்றி ஜம்புலிங்கமே திகைத்து ப்ரமிக்கும்படியான சாந்தியும், அமைதியும் நிலவி இருப்பதைக் கண்டு பங்கஜம் அவரையே உற்றுக் கவனித்தாள். மகாமேதையும் யூகசாலியுமான ஜம்புலிங்கம்...பங்கஜம் இவரைக் கண்டு இனிமேல் பயப்படாதே! இப்போது இவர் மகாபரிசுத்தமான தபஸ்வி...வைராக்ய சிகாமணி...புனித ஆத்மா...ஆகையால் நீ நிர்ப்பயமாயிரு. இவர் என்னைக் கொன்று விடுவாரோ என்று நடுங்குகிறாய் என்று உன் முகத்தைப் பார்க்கும்போதே தெரிகிறது. அப்படிக்கொன்றும் நடுங்க வேண்டாம்...பிறகு விஷயத்தைக் கேளு. ராஜாராமனின் சாதுர்யபுத்தியையல்லவா புகழ வந்தேன். மகாயூகமும். கூர்மைபுத்தியும் நிறைந்தப்பயல் இவரை உற்று உற்றுக் கவனித்துத் தனக்குள் பெரிய குழப்பமும் கலவரமும் அடைந்து அந்தப் படத்தில் பார்த்த அதே முகம் அதே சாயலா இருக்குமா! என்று வெகு கூர்மையாக யோசித்துப் பார்த்தானும்.

சிலநிமிஷங்களுக்கெல்லாம் டாக்டர் இவரை இங்கு அழைத்து வந்தார். பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் நீயே வந்துவிட்டாய்! என்ன அதிசயமான சம்பவம் என்பதையும் அந்த சிரஞ்சீவிப் பயலின் மதியூகத்தையும் நினைத்து நினைத்து நான் பூரிக்கின்றேன். ஸரி. உன் வேலை ஆய்விட்டது. நீ பந்தோபஸ்துடன் வீட்டிற்குப்போய் வா! என்று பங்கஜத்தைத் தகுந்த துணையுடன் அனுப்பிவிட்டார்.

பிறகு அந்த மனிதனைப் பார்த்து அங்கமுத்தா! உன்னுடைய கடிதத்தின் வாசகத்தையும் உன் வேஷத்தையுங் கண்டு நான் பூர்ணமாக நம்பவேண்டியிருக்கிறதே யன்றி... என்று முடிப்பதற்குள் சாந்த ஸ்வரூபியான அம்மனிதன் மிக்கசாந்தத்துடன் பேசத் துடங்கி; ஐயா! நான் வணங்கும் குலதெய்வத்தின் மீது ஆணையாகவும் சிறைச்சாலையில் என்னிரும்பு மனத்தைப் பஞ்சு மனமாக மாற்றி அறியாமை இருளைப் போக்கி அறிவுச் சுடர் விளக்கை ஏற்றிவைத்த பெரியவராகிய ஆசாரியன்மீது ஆணையாகவும் நான சொல்வது முற்றிலும் சத்தியம்.

என் சகோதரனுக்குப் பரிந்தோ! தாயாரின் துயரத்தைப் போக்கிவிடத் துணிந்தோ நான் இதைச் செய்யவில்லை. என் தாயாருக்கு ஸத்யமாய் நான் யார் என்றே தெரியாது. தாங்கள் என்னைக் கைதியாக்கி என்னைத் தண்டித்த மகோபகாரத்தினாலல்லவா! நான் இன்று இத்தகைய நல்ல நிலைமையை அடைந்தேன் என்கிற நன்றி விச்வாசத்தைக் காட்டி உங்களுக்கு உதவி செய்வதற்காகவும், நான் யாரோ ஒரு சாமியார் என்கிற முறையில் என் தம்பியைத் தீய விபத்திலிருந்து காத்து புத்தி புகட்டவுமே நான் செய்தேன்.

அன்பரே! இன்னொரு ப்ரமாணம் சொல்லுகிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன்பு "ஆத்மரக்ஷணம்" என்கிற ஒரு புத்தகம் வெளியானதும் அதைப்பற்றி பல பத்ரிகைகள் வெகு வெகு சிறப்பாக எழுதியிருந்ததும்—என் தங்களுக்கே ஒரு புத்தகத்தை ஒரு தினம் மாலை 6 மணிக்கு நானே நேரில் கொண்டு கொடுத்ததும் நினைவிருக்கலாம். இந்த அடிமைதான் அந்தப் புத்தகத்தை எழுதியது என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றதைக் கேட்டதும் ஐம்புலிங்கம் திகைத்துபோய்... என்ன! என்ன! அத்தகைய அருமையான, விலைமதிப்பற்ற புத்தகத்தை நீயா எழுதினாய்! என்னால் நம்பவே முடியவில்லையே! யாரோ! எஜமான் கொடுக்கச் சொல்லியதாக ஒரு வேலைக்காரனைப்போல் வந்தது நீயா அங்கமுத்து? இதென்ன ஆச்சரியம்! என்னெதிரில் பழைய கொலைகார அங்கமுத்துவா உட்கார்ந்திருப்பது? இந்த விசித்திரத்தை என்னால் நம்பவே முடியவில்லையே! என்று திகைத்துப்போய்விட்டார். மீண்டும் பேசத்துடங்கி,

அங்கமுத்தா! உன்னை நான் பூர்ணமாக நம்பலாமா! ஆபத்து ஒன்றுமில்லையே! என்று தீனமான குரலில் கேட்டார். அங்கமுத்து ஐம்புலிங்கத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, எஜமான்! அன்று தாங்கள் கைது செய்த அங்கமுத்து சிறையில் மாண்டு புனர்ஜென்மம் எடுத்துவிட்டான். இந்த அடிமையிடம் இனி என்றுமே பயப்பட வேண்டாம். இது சத்யமாக நம்பலாம். இந்த அடிமையைத் தேடியழைத்து வரும்படி அம்மா அவர்களைத் தாங்கள் அனுப்பியதாக உங்கள் வார்த்தையிலிருந்தே தெரிந்து

கொண்டேன். அடிமைக்கு என்ன உத்திரவு...எதற்காக அழைத்தது? என்று வினயமாகக் கேட்டான்.

ஜம்பு:—அங்கமுத்தூ...ஐயோ! மறந்து போய் பழய பெயரையே சொல்லிவிட்டேன். இப்போது நீ எந்தப் பெயரில் விளங்குகிறாய்.

அங்க:—எஜமான் இந்த அடிமையின் பெயர் புத்தகத்திலிருக்கிறதே அதுதான் விளங்கி வந்துவிட்டது.

ஜம்பு:—ஓகோ! "அன்பர்தாஸன்" என்றேஹர்ஜிதமாகிவிட்டதா! பேஷ்! நான் அதிலும்சுருக்கி தாஸர் என்றே கூப்பிடுகிறேன். இப்போது நடந்துள்ளசிக்கல்முக்கலான வழக்கில் நீ ஒரு பகுதியை மட்டும் விளக்கிவிட்டது போதாது. எப்படியாவது இதில் சம்மந்தப்பட்டுள்ள மற்றைய விஷயங்களில் உனக்குத் தெரிந்த சில உண்மைகளைக் கண்டு பிடித்துத் தரவேண்டும். தவிர ஏதோ பயங்கரமான விபத்தை யாரோ உண்டாக்கப் போவதாக உன் கடிதத்தில் கண்டிருந்ததைப்பற்றி விவரம் தெரியுமானால் கூற வேண்டும்.

அங்க:—எஜமான்! என்றைக்கோ எடுத்த என்னுடைய புகைப் படத்தைப் பார்த்துவிட்டு இன்று உங்களால்கூட கண்டு பிடிக்க முடியாதபடி அடையாளம் மாறிவிட்டிருக்கும் என்னை அந்தச் சின்னஞ்சிறு பையன் ராஜாராமன் பார்த்தவளவில் கண்டுபிடித்து விட்ட ஒரு அதிசயத்தைக் காண நாம் சந்தோஷப்படுகிறோம். ஆனால், அவனைக் கண்டு பொறுமைப்படும்—உங்களைப் பார்த்து வெடித்துவிடும்—விரோதிகள் தவிர ராஜாராமனின் பிதாவுக்கு வேண்டாத சிலவிரோதிகள்—எல்லாத் துர்க்குணங்களும்சதிகாரக் கூட்டமாகச் சேர்ந்து வைரம் வைத்திருப்பதால் அதை முதலில் உங்களுக்குத் தெரிவித்து உங்களையும், சிறுவன் ராஜாராமனையும் காப்பாற்றுவதற்காகவே எழுதினேன்.

எஜமான்! நாற்றக் குப்பையாக நான் நாறிக்கிடந்தபோது இந்தக் கூட்டத்தினரின் ஸகவாஸம் மனதிற்குச் சரியாயிருந்தது. இப்போது அவைகளைக் காணவே பிடிக்கவில்லை. ஆதலால் நான் என் தம்பியிடம்கூட அதிகம் நெருங்கவில்லை. தங்களுக்கு வேண்டிய சகல விஷயங்களையும் எழுதி விட்டதால் இதற்குமேல் எதுவும் எனக்குத் தெரியாது. இனிமேல் எந்த விஷயத்தை அறிவதற்கும் சிரஞ்சீவி ராஜாராமன் ஒருவனே போதுமே!...சில காலம் அவனை எங்காவது மறைவிடமாக வைத்துக் காப்பாற்றினால் தேவலை. அவன் முகத்தைப் பார்க்கும்போதே அவன் மகத்தான சூரன் என்றும் வருங்காலத்தில் அவனுக்கு நிகர் அவன்தான் என்கிறபடி இருப்பான் என்றும் தெரிகிறது.

ஜம்பு:—அப்படியானால் உனக்கு ஜோஸியம்கூடத் தெரியும் என்று தெரிகிறது. உண்மைதானா!

அங்க:—எஜமான்! அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னுடைய அந்தராத்மாவில் ஏதோ ஒன்று சொல்லியது; அதைத் தங்களிடம் கூறினேன். எஜமான்! எனக்கு உத்திரவா! என்னுடைய நண்பர்களும் என் குருநாதரும் காத்திருப்பார்கள்.

ஜம்பு:—குருநாதரா! ஜெயிலிலிருந்ததாகச் சொல்கிருயே அவரா ...அது சரி! உன்னிடம் முக்யமாக நான் கேட்க வேண்டியது என்னவென்றல், முருகப்பனைப்பற்றி உனக்கு என்ன தெரியும். உன்னுடைய அபிப்ராயம் என்ன? அவன் பேரில் கணக்கற்ற புகார் ஏற்கெனவே இருப்பதோடு இந்தக் கொலை கேஸில் அவன் மீதுதான் அதிகமான குற்றமிருக்கிறது. அதனுல்தான் கேட்கிறேன்.

அங்க:—எஜமான்! முருகப்பனை எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனுல் அவன் தன் கையினுல் நேராகச் கொலை செய்யவில்லை என்பது மட்டும் என் தம்பியும் அவன் கூட்டத்தினரும் சொல்கிருர்கள். அது விஷயத்தில் பார்த்து செய்தால் நலம். எனக்கு நேரமாகிறது உத்திரவு தரவேண்டும் என்று கேட்கும்போது இரண்டு பேர்கள் தடதடவென்று உள்ளே வந்தார்கள்.

ஜம்புலிங்கத்தின் உத்திரவின்றி உள்ளே இருவர் வருவதைக் கண்டு ஜம்புலிங்கம் ஒருவாறு திகைத்துத் திடுக்கிட்டு மெல்ல கவனிப்பதற்குள் ஒருவன் குபீரென்று அங்கமுத்துவின் மீது பாய்ந்து அப்படியே அமுக்குவதைக் கண்ட ஜம்புலிங்கம் அலறி நடுங்குவதற்குள் அவர் மீதே மற்றொருவன் பாய்ந்து முகத்தில் ஒரு துணியைப் போட்டு மூடிவிட்ட வேகத்தில் ஒரே மயக்கமாகித் தன் நினைவு அழிந்து போய் விட்டார். அடுத்த நிமிஷமே இரண்டு முரடர்களும் சேர்ந்து ஜம்புலிங்கத்தையும் அங்கமுத்துவையும் தனித்தனியே கட்டி அருகிலிருந்த கம்பியில்லாத ஜன்னல் வழியாக தடாரென்று உருட்டிவிட்டு இவர்களும் ஒரே க்ஷணநேரத்திற்குள் குதித்துவிட்டார்கள்.

வீட்டிற்குச் சென்ற பங்கஜத்திற்கு மட்டும் மனம் இருப்புக் கொள்ளாமல் ஏதோமாதிரி தவித்தது. அங்கமுத்துவைப்பற்றித் தன் கணவன் சொல்லிய வார்த்தைகள் மட்டும் அவளால் நம்ப முடியாத வேதனை செய்ததால் உண்மையில் அங்கமுத்து மாறியிருப்பானு! அல்லது ஏதாவது கெடுதல் செய்வதற்குத்தான் வந்திருப்பானு! என்கிற தடுக்கமுடியாத எண்ணமும் வேதனையும் பாதித்ததால் அவளால் அங்கு நிற்கவேமுடியாது தவித்தது.

தானே மறுபடியும் அவரிடமே போய் பார்க்கலாமா? என்று தோன்றியது. எதற்கும் டெலிபோன் செய்துபார்க்கலாம் என்று டெலிபோன் செய்தாள். டெலிபோனில் எத்தகைய சப்தமும் கேட்காமல் இருந்ததால் அதுவேறு சந்தேகம் உண்டாகியதால் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறை செய்து பார்த்தும்

ஒன்றும் பலனில்லாததால் ஏற்கெனவே இருந்த சந்தேகம் பின்னும் அதிகரித்தது.

உடனே டாக்டர் வீட்டிற்கு டெலிபோன் செய்தாள். டாக்டரே பேசினார்...டாக்டர் ஸார்! மன்னிக்கவேணும்! ஆஸ்பத்திரியில் அவர்படுத்துள்ள தனி விடுதிக்கு டெலிபோன் செய்தால் எத்தகைய தகவலும் இல்லை. தாங்கள் யாரையோ கொண்டு விட்டீர்களே அந்த மனிதனைப்பற்றி எனக்கேதோ பெரிய பயமாயிருக்கிறது. டெலிபோன் கெட்டுவிட்டதா! அல்லது...என்பதற்குள் டாக்டருக்கும் சற்று பயம் உண்டாகியதால், அம்மணீ! இங்கேயே இருங்கள்! நான் நேராகப்போய்ப் பார்த்துவிட்டு வந்து சொல்கிறேன். என்று ரிஸீவரை வைத்துவிட்டு ஜம்புலிங்கம் படுத்துள்ள ஸ்பெஷல் ரூமுக்குச் செல்கையில் வழியிலுள்ள விளக்குகளே எரியவில்லை. ஒரே இருட்டாக இருந்தது கண்டு திடுக்கிட்டவராய் தன் ஜேபியிலிருக்கும் டார்ச்சு விளக்கைப் போட்டு பார்க்கையில் ஆங்காங்கு பாராவிருக்கும் சேவகர்கள் தாறுமாறுமாக விழுந்துகிடப்பதைக் கண்டு அவருக்கே தலைசுற்றி மயக்கம் வந்துவிடும் போலாகிவிட்டது. உரத்த குரலில் ஆட்களைக் கூப்பிட்டார்.

வேறு இடத்திலிருந்து சிலர் ஓடிவந்தார்கள். இந்த அலங்கோலத்தைக் கண்டு ஒன்றுமே புரியாது எல்லோரும் நடுநடுங்கி திகைத்துப் போய்விட்டார்கள்.

---

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183197

இரு பதிப்புகள்

இசைச் சித்திரம்
**சந்திரகலாமாலை**
வை. மு. கோ.
சென்னை ரேடியோவில்
ஒலி பரப்பிய
இசைச் சித்திரம்
சரித்திரம்
பாடல்கள்
பாசுர ஸாரம்
உள்பட
அணா 12

பாராயண பதிப்பு
பக்த வில்லியின்
ஸ்ரீ ஆண்டாள்
**சந்திரகலாமாலை**
*
வை. மு. ஸ்ரீ.
எழுதிய
பாசுரஸாரத்துடன்
*
அணா நான்கு

ஜகன்மோகினி வெளியீடு

# ஜகன்மோகினி காரியாலயம்,

26. தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

## வை. மு. கோ. நாவல்கள்

4–8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2–8
அமுதமொழி (கினேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2–4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி (சாதா)
தெய்வீக ஒளி
ஜீவநாடி
மாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று

ரூ. 1–12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1–8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
ரூ. 1–4
கோபால ரத்னம்
க்ருபாசமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1–2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய மூரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா.13
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
அணா 8.
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி

ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைர்யலக்ஷ்மி

### வை. மு. ஸ்ரீ.

| | |
|---|---|
| உதய சூரியன் | 1– |
| பெண்மணிக்கனல் | 1–0 |
| இருளில் ஒளி | 1–4 |
| தியாகபலி | 0–12 |
| ஜயந்திசிந்தனைகள் | 1–8 |

### வை. மு. பத்மினி

பாலர் மோகினி
12 சிறு கதைகள்

### சுத்தானந்த பாரதி

காந்தி கீர்த்தனம் 3-8

### ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் 1-0
அபூர்வ ராமாயணம் 1-8







JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.


டிசம்பர்
16௨ முதல்
விஜயாவின்
குணசுந்தரி
தமிழ்
டைரக்ஷன்: கே.காமேஸ்வர ராவ்
தயாரிப்பு:
நாகிரெட்டி-சக்ரபாணி